விலை ரூபா 2-00

பருவ வெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

## மூவாயிரம் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

(புத்தளம்)

இலங்கை அரசாங்கம் "இஸ்ரேல் நலன்காப்புப்பிரிவு" ஒன்றினை அமெரிக்க தூதரகத்தில் ஏற்படுத்தவிருப்பதனைக் கண்டித்து புத்தளம் பெரிய பள்ளிவாசல் முன்பாக மூவாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் சுலோகங்களை எழுப்பி கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டம் செய்தனர். (16ம் பக்கம் பார்க்க)

மலர் 26 வைகாசி 14 ஷஃபான் 25 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27—5—84 இதழ் 102

# 'இந்தியாவுடன் நட்புறவையே இலங்கை விரும்புகிறது!' — ஜப்பானில் ஜனாதிபதி ஜே. ஆர்.

(டோக்கியோ)

'இந்தியாவுடன் நட்புறவை வளர்க்கும் வகையிலேயே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்துள்ளது. எப்போதுமே சிநேகபூர்வமான உறவைப் பேணிக்கொள் இலங்கை விரும்புகிறது" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜப்பான் பிரதமர் யாசுஹீரோ நாகசோனவிடம் தெரிவித்தார்.

சீனாவிலிருந்து உத்தியோகப் பற்றற்ற விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் ஜப்பான் வந்து சேர்ந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை அவர் தங்கியிருந்த டோக்கியோ இம்பீரியல் ஹோட்டலில் ஜப்பான் பிரதமர் சந்தித்து உரையாடினார்.

சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் இலங்கை விரும்புகிறது என்று தெரிவித்த ஜே. ஆர். இலங்கையில் நடந்த ஜூலை இனக்கலவரம் குறித்தும் குறிப்பிட்டு, இப்போது நாட்டின் நிலைமை ஸ்திரமாகி விட்டதென்றும், இலங்கையில் தொழிற் துறைகளில் ஜப்பான் அச்சமின்றி முதலிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

[16ம் பக்கம் பார்க்க]

## "இப்போது நாட்டுக்குள் 'புலி'கள் வந்துவிட்டன!"

★ பிரதி அமைச்சர் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

"முன்னர் புலிகள் காட்டில் வாழ்ந்தன. அதனால் அவற்றை அழிப்பதற்கு துப்பாக்கிகள் தேவைப்பட்டன. ஆனால் இப்போது 'புலிகள்' நாட்டுக்குள் வந்துவிட்டன. அவைகள் விவசாயிகளிடமிருந்து துப்பாக்கிகளை அபகரிக்கும் என்ற காரணத்தினாலேயே அரசாங்கம் துப்பாக்கிகளை எடுத்துள்ளது."

இவ்வாறு பிரதி கிராம அபிவிருத்தி அமைச்சரும், மட்டக்களப்பின் இரண்டாவது எம்.பியுமான பரீத் மீராலெப்பை கூறினார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தின் அமைச்சர்கள் புலிகளுக்கு பயந்து இங்கு வருவதில்லை. ஆனால் நான் எவருக்கும் பயப்படாமல் இங்கு வந்துள்ளேன்" என்றும் அவர் குறிப்பிட்டார். [சு]

★ துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் போது

# கைதான இரு இளைஞர்கள் நஞ்சருந்தினர்!

## ஒருவர் பலி; மற்றவர் மயக்கம்

(வவுனியா)

துண்டுப்பிரசுரம் விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இருவாலிபர்கள் நஞ்சருந்திய நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மரணமானார், மற்றவர் மயக்கமான நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

மரணமானவர் இரணை இலுப்பைக் குளம் என்ற இடத்தைச் சேர்ந்த அருளம்பலம் இராஜபதி 27 வயது) மற்றவர் பண்டாரிக் குளத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. வேப்பங்குளம் என்ற இடத்தில் இடம் பெற்ற ஒரு சம்பவம் தொடர்பான துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதில் ஈடுபட்டிருக்கையிலேயே இவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

### சூட்டுக் காயத்துடன் இருவர்

துப்பாக்கிச் காயங்களுடன் இரு இளைஞர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வவுனியா வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த பாலவாஸ்கரன் (28), கந்தசாமி (89) ஆகியவர்களே துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்றுவரும் இளைஞர்கள்.

### இராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு ஸ்ருடியோவும், ஒரு அச்சுக் கூடமும் நேற்றுக் காலை இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

நீண்டநேரம் நடைபெற்ற இச்சோதனையின் போது ஸ்ரு

(16ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை பஸ் டிப்போ கொள்ளை: 21 பேர் தற்காலிக நீக்கம்! கோண்டாவிலில் 4 பேர்!!

(ஏ.வி.மாணிக்கம்)

பருத்தித்துறை வடபிரதேச போக்குவரத்துச் சபை டிப்போவில் நடந்த கொள்ளைச் சம்பவத்தின்போது கடமையிலிருந்ததாகக் கருதப்படும் 21 ஊழியர்கள் தலைமைப்பீட உத்தரவின் பேரில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கோண்டாவில் டிப்போவில் நடைபெற்ற கொள்ளை முயற்சிச் சம்பவம் தொடர்பாக மூன்று பாதுகாப்பு ஊழியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும், வல்வை திருத்தினர் பகுதியைச் சேர்ந்த ஒரு ஊழியர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த 6ம் திகதி இரவு பருத்தித்துறை பஸ் டிப்போவில் சுமார் 7 ஆயிரம் ரூபாவை இனந்தெரியாத 15 துப்பாக்கி இளைஞர்கள் கொள்ளையடித்தது தெரிந்ததே.

## யாழ். ஆஸ்பத்திரி தாதியர் போர்க்கொடி!

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சுமார் 250 தாதிகள், கடந்த 6 மாத காலமாக மேலதிக ஊதியம் வழங்கப்படாதது குறித்து கவலை தெரிவித்து உயர் அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் மற்றைய சகல ஊழியர்களுக்கும் உரிய காலத்தில் மேலதிக ஊதியம் வழங்கப்படும் அதே நேரத்தில் தாதிகளுக்கு மாத்திரம் ஏன் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று தெரியவில்லை என்று தாதியர்கள் அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக ஊதியம் வழங்கப்படாதது குறித்து அவர்கள் பொது சுகாதார [illegible] சுகாதார அமைச்சுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளதாக தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். [மா]

● கிராமசேவையாளர் கொலை

# தமிழீழ மக்கள் விடுதலை கழகம் உரிமை கோருகிறது!

(யாழ்ப்பாணம்)

கிராமசேவை அலுவலர் பிரான்சிஸ் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தது தாங்கள் தானென "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்" உரிமை கோரி பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில், விடுதலைப் போராளிகளின் நடமாட்டம், இருப்பிடங்கள் பற்றி நீண்ட காலமாக இராணுவத்தினருக்கு தகவல் அனுப்பி வந்ததை மெய்ப்பிக்கும் பிடிபட்ட ஆதாரங்களின் அடிப்படையில் மரண தண்டனை சந்திப்பாயின் நிறைவேற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் காட்டிக்கொடுப்பதன் மூலம் விடுதலைப்போராளிகளையும் போராட்டத்தையும் நசுக்கிவிட முடியுமென்று எண்ணுபவர்கள் என்றுமே தமது எண்ணத்தை நிறைவேற்றி விடமுடியாதென்றும் விடுதலை போராளிகளின் [illegible] கள் இனிமேலும் [illegible] களுக்கு மரணதண்டனை வழங்கப்படுவது தவிர்க்கமுடியாதது என்றும் [illegible] திருமென்றும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துண்டுப்பிரசுரம் "சுதந்திரப் பறவைப்பிரிவு" தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் படைத்துறைச் செயலகத்தினால் வெளியிடப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

### புலிகள் உரிமை கோருகிறது

அரசிற்கு தகவல் கொடுத்து வந்த ந. சிவதாஸ் என்பவருக்கு இம்மாதம் 12ம் திகதி மாதகலில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள், வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16-ம் பக்கம் பார்க்க)

## எமது சிறுகதை



# மறுபக்கம் பார்த்தால்...

■ குமார் தனபால்

அந்த நண்பனின் பண வருவாயின் புதிருக்கு என்னால் இன்றுவரைதான் விடை காணமுடியவில்லை. நூறு ரூபாய்த் தாள் ஐம்பது ரூபா நோட்டுக்கள் இவனிடம் தாராளமாகப் புழக்கத்தில் இருக்கும். சில்லறைகள் இவனிடம் குறைவாகவே புழங்கும். அவனை நாங்கள் 'பாங்கர்' என்றுதான் அழைப்போம். அவ்வளவு பணவசதியானவன்!

மாலை நேரங்களில் இவன் சந்தியில் வந்து நின்றால் போதும் ஒரு பத்துப்பேர் இவனைச் சுற்றி பகிடிகள் விட்டுக்கொண்டு நிற்போம் அதில் நானும் ஒருவனாக நிற்பேன்.

சிறிது நேரத்தில் முன் கடையில் ஒரு நூறு ரூபாய்த் தாளையோ, ஒரு ஐம்பது ரூபா நோட்டையோ மாற்றி எல்லோருக்கும் சோடா, சிகரெட், தேநீர் விரும்பியதை வாங்கிக் கொடுப்பான்.

'கடவுள் ஏழைகளை நேசிக்கிறார்; பணக்காரர்களுக்கு உதவுகிறார்' என்ற வரிகள்தான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. பண விஷயத்தில் ஆண்டவன் இவனுக்குத் தாராளமாக உதவுகிறார்.

நல்ல வசதியானவன் வடிவாகச் செலவழிக்கிறான். ஆடம்பரமான உடுப்புக்கள் அதற்கேற்ற மிதி வண்டி... இவனைப் பெற்றவர்கள் இவனால் எவ்வளவு சந்தோசமாக இருப்பார்கள்!

நானும் இருக்கிறேனே!... இற்றைவரை என் தாய்க்கு ஒரு ரவிக்கைத் துண்டாவது எடுத்துக் கொடுத்திருப்பேனா? முழுசாக ஒரு ஐம்பது ரூபாத் தாளை மாற்றிச் செலவழித்திருப்பேனா...!

உலகத்தில் பிறந்தால் இவனைப்போல் அல்லவா பிறக்க வேண்டும் இவனைப்போல் அல்லவா செலவழிக்க வேண்டும்: பெற்றவயிறுகள் குளிர இப்படி பெருமையாக நடக்க முடியவில்லையே என மனதிற்குள் பொரிந்து கொண்டாலும் மறுநாள் மாலையும் நாங்கள் இவன் வருகையை எதிர்பாரத்துக் கொக்கைப்போல் காத்திருப்போம்.

மறுநாள் மாலையும் அதே செலவு; சிலநாட்களில் சாராயக்கடைக் கனகு வீட்டில் கணவாய்கறியுடன் சிலபோத்தல்களும் திருகப்படும். அன்றைய நாடகளில் எனக்கு நிறைவெறிதான் பூரித்துப் போவேன்.

ஒருநாள் எனக்கு முழுசாக ஒரு முப்பது ரூபாய் தேவைப்பட்டது. யாரிடம் யாசிப்பது; எனவே நம்பி யார் கடன் தருவார்கள்... என மூளையைப் போட்டுக் குழப்பியபோதுதான் இந்தரூபாய் நோட்டுக்காரன்; எங்கள் வங்கிக்கார நண்பன் நினைவில் மோதினான்.

நான் அவனிடம் கேட்கப் போகும் இந்த முப்பதுரூபாய் அவனுக்கு மூன்று சல்லிக்குச் சமம்.

சந்தியில் நண்பர்களிடம் இவன் வீட்டை விசாரித்துக் கொண்டு அவன்தரப்போகும் மூப்பது ரூபாயால் நான் அடையப்போகும் சுகங்களை மனதிற்குள் சப்புக்கொட்டியபடி அவன்தெருவை அடைந்து —தெருவில் விளையாடிக் கொண்டு நின்ற சிறுசுகளிடம் அவன் வீட்டை வினவிய போது, அந்த நீலப்படலையை அவர்கள் அடையாளம் காட்டினார்கள்.

நான் அந்த நீலப்படலையடிக்குச் சென்றபோது. வீடா அது......எங்கள் வீட்டு...... மாட்டுக்......

இவனைப்போல் அல்லவா இவன் வீடும் ஆடம்பரமாக இருக்குமென்று நினைத்தேன்! பளபளக்கும் மிதிவண்டி முற்றத்தில் நின்றது. உள்ளே ஒரே ஆரவாரம்!

''எடேய், ஒரு அரைருத்தல் பாணுக்கெண்டாலும் காசு தந்திட்டுப்போவனடா.... .... ராத்திரி என்ரை சாப்பாட்டையெல்லே உனக்குவச்சுத் தந்தனான்...'' இது வயது போன ஒரு பெண்ணின் குரல்.

''ஒருசதமும் தரமாட்டன். எனக்கே இண்டைக்குக் கைச் சிலவுக்கு நூறு ரூபாய்தான் இருக்கெண்டு முழுசுறன், அவ அரை ருத்தல் பாணுக்குக் காசு தரட்டாம்... போனை அங்காலை..!'' இது அந்த வங்கிக்கார நண்பனின் குரல். அது தாயாகத்தான் இருக்க வேண்டும். என் ஊகம் சரி! நான் அந்த நீலப் படலையடியில் இருந்து சற்றுப் பின் வாங்கினேன்.

'படார்' என அந்தப் படலையடித்துச் சாத்தும் சத்தம். அந்த ரூபாய் நோட்டுக்கார நண்பன் மிக நிதானமான அலங்காரத்துடன் அந்தப் பளபளக்கும் மிதி வண்டியில் கம்பீரமாகச் சந்தியை நோக்கி உலாப்போய்க் கொண்டிருந்தான்.

இந்தப்'பணக்கார' நண்பனின் மறுபக்கம் இவ்வளவு மோசமானதா?

''இவன் வீட்டிற்குதவாத ரூபாய்கள் இவனுக்கு எப்படி வந்து சேருகின்றன?,'

''இவன் என்ன தொழில் செய்கிறான்?''

ஐயய்யோ...தயவு செய்து அந்தத்தொழிலைக்கேட்டு என் மூளையைக் குழப்பாதீர்கள்!

(யாவும் சற்பனை)

---

● ஆசிரியர்: இலங்கைக்கு அருகிலே இருக்கும் 2 நட்சத்திரங்களின் பெயர்கள் எவை? ராகுலன் விடை சொல்லும் பார்ப்பம்.

ராகுலன்: ரஜனிகாந்த், கமலகாசன்.

- கிரி

---

# அந்தாதி பாடிய அருமைக் குழந்தை

க. சி. குலரத்தினம்

யாழ்ப்பாணத்து சண்டிருப்பாய் ஊரைச்சேர்ந்த கல்வளைப்பதியில் எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமான் மீது ஒரு பிரபந்தம்பாடுவதற்கு வில்லவராய முதலியார் பெருமுயற்சி யெடுத்தார் போதியளவு பனையோலைச்சட்டங்கள் தயாரித்து, எழுத்தாணிகளைக் கூராக்கிக்கொண்டார் எடுத்த எடுப்பிலே கட்டளைக் கலித்துறையைப்பாடினார் முதலிரண்டு அடிகள் அருமையாக அமைந்தன. மூன்றும் நான்காம் அடிகள் தடைப்படவே ஏட்டையும் எழுத்தாணியையும் வைத்துவிட்டு அயலில் உலாவியவாறே சிந்தித்து, நல்ல அடிகளை இயற்றிக்கொண்டு விரைந்து மீண்டு சென்று, ஏட்டை எடுத்தார். பாடல் மிகவருமையாக நிறைவுசெய்யப்பெற்றிருந்ததுகண்டு தம்மினும் பார்க்கப்பெரும் புலமையாளன்யாரோ தாமில்லாத வேளையில்வந்து, இரகசியமாக இரண்டடி பாடிவைத்துப் போன பொருத்தத்தைக் கண்டுமகிழ்ந்தார். தன்மனைவியை அழைத்துவிசாரித்தார். மனைவியார் மிகுந்ததயக்கத்தோடு, மகனைத்தவிர வேறெவரும் அங்கேவரவில்லையென்றும், மகனேஏட்டைஎடுத்துக்கிறுக்கினான் என்றும் சொன்னதும், முதலியார் ஆனந்தங்கொண்டு துள்ளிக்குதித்து, மகனுக்கு ஆளனுப்பி அரவணைத்து, ''அருமைமைந்தனே! புலவர்பெருமானே! நீயேஇந்தப்பிரபந்தத்தைப் பாடிமுடியடா! என்கண்மணி'' எனறுபெரிய உபசாரஞ்செய்தார் மகனே முன்னர்தமிழ் நாட்டுவித்துவான் விறைக்கும் வண்ணம் பொன்பூச்சொரியும் கொன்றையைப் பாடியவர் என அறிந்தார். நாமகள் கடாட்சத்தால் சின்னத்தம்பிப் புலவர் கல்வளையந்தாதி என்னும் பிரபந்தத்தை அருமையான கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் விரவிவர இரவுபகலாகப் பாடிமுடித்தார். எடுத்துக்கொண்ட நூலுக்கு பாட்டுடைத் தலைவனாய விநாயகப் பெருமானையே விளித்து, ''பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயும் கும்பக்கார் கொண்ட கம்பக்களியானை முன்னின்று காப்பதுவே'' எனத்தொடங்கினார். இத்தொடரே வில்லவராய முதலியாரை வியக்கவைத்ததாகும்

கல்வளைவிநாயகப் பெருமானின் திருவடிவத்தைக் குளிரக்காண்பதற்கு ஆயிரங் கண்வேண்டும் என்பர் ''கல்வளைக்கற்பகரின் கண் தலம் மூன்றும் எனையால்பொற்பாதமும் காணவிண்ணுகண்டலன போற்கண்படைத்திலன் வாசக் கமலத்தனே'' சந்தனம் சும்மாவரிற் பூசலாம் என்பது சிலேடையமைந்த வாக்கியம். தூதனுப்பிய அன்னம்சும்மா வருதலையும் அது குறிக்கும். புலவர் நாயகி பாவனையில் விநாயகப்பெருமானிடம் தூதனுப்பிய அன்னம் இன்னம்வரவில்லை என்று தோழியர் கவலைகொண்டு, ''சந்தனமின்னம் வரக்கண்டிலோம் என்னதாமதமே', என்பர்'

### கவிநயம்

தலைவனே தலைவியின் காதலையுணர்ந்து, தாமதிக்காது முத்தாரமும் கொண்டு வந்து விட்டார். ஆனால் தலைவியின் மெலிவால் இடை முறிந்துவிடும் என்றுகருதி இவர்கள் அவள் நெஞ்சில் சந்தனக்குழம்பைக்கூடப பூசவில்லை. இங்ஙனமாயின் தம்முடைய 'முத்தாரத்தை எங்கள் தலைவியின் மார்பு தாங்குமோ? என்று தோழியர் கூறும்பகுதி நயமுள்ளது.

கல்வளைப்பதியின் செழுமையையும் வனப்பையும் குழந்தைப்புலவர் நன்றாகப்பாடுகின்றார் தாழைமர நிழலில் தங்கிவாழும் சங்குக்கூட்டங்கள் முத்துக்களை ஈனுகின்றனவாம்.

கல்வளை விநாயகப் பெருமானை இராமபிரான் தொழுது கொலைப்பாவம் தீர்த்துக் கொண்டார் என்று புலவர் பாடும்போது இவருடைய பக்திப் பரவசத்தை அறியக் கூடியதாயுள்ளது. ''கவிநாயன் தொடும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்கவி நாயக திருக் கல்வளை வாழுங் கணபதியே''

### அகப்பொருளும்

### பக்தியும்

இங்ஙனமாகப் பக்தித் துறை அகப்பொருட்டுறை இயற்கை அழகு நயப்பு முதலியன யாவும் இயல்பாக அமைந்த கல்வளையந்தாதி, அன்று தொடக்கம் புலவர் நாவில் பொருந்தி வழங்கி வந்தது. இதன் அருமையை அறிந்த சமகாலப் புலவரான வரத ராசகவி என்பார் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார் சங்க நூல்களோடு வைத்தெண்ணக்கூடிய தரம் பொருந்தியது என்பர். மேருமலையில் பரதக் கதையை எழுதிய விநாயகருக்கு ''முற்சங்கத்து நூலென நல்லைச் சின்னத்தம்பிப் புலவன் நல்லந்தாதி மாலையைச் சாற்றினனே'' என்பர்:

### உரைச்சிறப்பு

இத்தகைய புகழ் பூத்த கல்வளையந்தாதிக்கு முதலில் பதவுரையெழுதியவர், வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியரான ச.வைத்திலிங்கபிள்ளை அவர்களாவார். இதைப் பழைய உரையெனத் தமிழ் நாட்டாரும் வெகுவாகக் கொண்டாடினர். அன்றி முன்னாள் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராயிருந்த அனவரத விநாயகம்பிள்ளை இதனை சென்னை ரிப்பன் அச்சகத்தில் வெளியிட்டுப் பரப்பினார்.

பின்னர் ஐம்பதாண்டுகளுக்கு முன் பாலபண்டித பரீடசார்த்திகள் பயன் செய்வதற்கான முறையில், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை பண்டிதர் திருஞானசம்பந்தபிள்ளை, முதலானோர் சேர்ந்து உரையெழுதி யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்கள்.

தமிழ் தந்த தாதாக்கள்

---

# கதவு

எண்ணக் கதவினைத் தட்டுங்கள் — நல்ல
எழுச்சியின் கருவெலாம் துள்ளிடும்
உண்மைக் கதவினைத் தட்டுங்கள் — அங்கே
உயரிய மெய்ப் பொருள் தோன்றிடும்.

அகத்தின் கதவினைத் தட்டுங்கள் — உடல்
அழகில் ஒளிர்வு துலங்கிடும்
தவத்தின் கதவினைத் தட்டுங்கள் — இறை
தந்திடும் இன்பங்கள் சார்ந்திடும்.

உறவின் கதவினைத் தட்டுங்கள் — அங்கே
உலகின் பெருமை மிளிர்ந்திடும்
அறிவின் கதவினைத் தட்டுங்கள் — பெரும்
ஆழ்ந்த மெய்த் தத்துவம் தெரிந்திடும்.

வாழ்வின் கதவினைத் தட்டுங்கள் — எழில்
வசந்தங்கள் அங்கே குலவிடும்
பாழும் துயர்கள் ஒழிந்திட- உடன்
பாபக் கதவினை மூடுங்கள்.

நெடுந்தீவு லக்ஸ்மன்

# ஊவா மாகாணமும் கதிர்காமமும்

நா. மாணிக்க இடைக்காடர்

காணிக் கச்சேரியைப் பற்றி எழுதும் பொழுது ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. மெதகம என்றஊரில் காணிக்கச்சேரி வைத்தேன். அங்கே போதிய காணிஇருந்தது — இதுஒரு காட்டுப் பிரதேசம் சிலபெண்களும் வந்திருந்தார்கள் வினவியதும் இவர்கள் அவ்விடம் கள்ளுஇறக்கும் மலையாளிகளின் சிங்கள மனைவிமாரென்றார்கள். இவர்களுக்கு காணிகொடுக்க சிறிது எதிர்ப்பு இருந்ததால் மற்ற எல்லோருக்கும் கொடுத்து முடிய என்னபிரச்சினை என்று கேட்டேன். இந்தப் பெண்கள் வெளி மக்களை விவாகம் செய்ததால் தங்களுக்கு அணித்தே வசிக்க முடியாதென்றார்கள் பெரும்பாலானோர். இதற்கிடையில் இந்தப்பெண்கள் தங்கள் சோகக் கதையை கூறினார்கள். மலையாளி கணவன் மிகவும் சிறந்தவனென்றும் நல்லாக மனைவியை பார்ப்பானென்றும் ஆனால் நாலு ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அறிவியாமல் இந்தியா போய்விடுவான்என்றும் இதனால் மனைவிமக்கள்மிகவும்கஷ்டப்படுகிறார்கள். இதை நிவர்த்தி செய்ய இவர்களிருக்கும் பொழுது காணியை கொடுத்தால் இவர்கள் உதவியால் காணியை திருத்தி வீட்டை கட்டிவிட்டால் பிறகு வசிப்பதற்காவது வீடிருக்குமென்றார்கள் அப்பொழுது நான் அரை மைல் இடைவெளி விட்டு இவர்களுக்கு பிரத்தியோகமாக காணிகொடுத்தால் மற்றவர்களுக்கு பாதகமல்லையென்றேன். ஒருவரும் ஒன்றும் கூறாததால் இவர்களுக்கும் காணி கொடுக்கப்பட்டது. இரண்டுவாரத்தில் மேலிடத்திலிருந்து காணிக்கச்சேரி முடிவை ரத்துச் செய்யும்படி உத்தரவு வந்தது. ஏனென்று விசாரித்தபொழுது அந்தஊர்மக்கள் அமரர் டி.எஸ். சேனநாயக்கா அக்காலத்து காணிவிவசாய மந்திரிக்கு முறைப்பாடு செய்து இச்சட்டலை வந்ததென்று அறிந்தேன். மந்திரிகாட்டிய ஒரேயொரு காரணம் பெண்களுக்கு காணிகொடுக்கப்படாதென்று. இது கேள்விப்பட்ட என்னுடைய நண்பன் ஒருவர் தொலைபேசி மூலம் விசாரித்தார். இதுகாரணமாக நான் ராஜினமா செய்வதாக கேள்விபபட்டேன். இது உண்மையாவென்றார், நான் அதற்கு அரசாங்ககாணியை அரசாங்கம் கொடுக்கவேண்டாமென்றால் எனக்கென்ன வென்றேன். கீதையில் கூறியபடி என்கடமையைச் செய்தேன். பலனை எதிர்பார்க்கவில்லை. இதனல் எனக்குஒரு மனஸ்தாபமும் இல்லை.

## தமிழ்த்தளபதியின் திறமை

ஊவா மாகாணத்து அளவு இலாகா தலைவர் அமரர் கேணல் இராஜசிங்கம் இலங்கை சரித்திரத்தைப் பற்றி நன்குஅறிந்தவர். ஒருமுறை எங்கள் இனத்திற்கு பெருமை கொடுக்கக்கூடிய விடயத்தை கூறினார்: கண்டிஅரசன் காலத்தில் ஒருதளபதி அல்லது உயர் அதிகாரி ஊவாமாகாணத்திற்கு அடிக்கடி வந்து பார்வையிட்டு போவதுவழக்கம். அந்தவிஜயங்களில் கிராமக்கோட்டு வழக்குகளுக்கு இந்தஅதிகாரி ... நீதிபதியாக கடமையாற்றினார். ஒருமுறை அரசன் ஒரு தமிழ்தளபதியை அனுப்பியிருந்தார். ஏதோ வழக்கைவிசாரிக்கும் பொழுது இதற்கு முன்நடந்த வழக்கைப் பற்றிகுறிப்பிட நேர்ந்தது. அந்நேரம் ஊவாமாகாணஅதிகாரிகள் தீர்ப்பைப் பற்றி முரணாக கூறினார். உடனேநீதிபதியாக கடமையாற்றிய தமிழ்தளபதி இதெல்லாம்ஏற்பட்டது தீர்ப்புகளை எழுத்துமூலம் செய்யாததால். இன்றுமுதல் எல்லாத்தீர்ப்பும் எழுத்துமூலம் பதிவுசெய்ய வேண்டும் என்றார். இதற்குப் பின் தான் எல்லாத்தீர்ப்பையும் எழுத்துமூலம் நடைமுறைப் படுத்தினார்கள். இந்த சிறந்த முறையை கொண்டு வந்த பெருமை எங்களுக்கு உரியது.

## கதிர்காம யாத்திரை

நிற்க, ஊவாவின் சமய வாழ்வைப் பார்ப்போம் எங்கு

# கதிர்காமத்தில் நிகழ்ந்த அற்புதம்

சென்றாலும் கதிர்காமத்தைப் பற்றிப் பேசுவார்கள். அனேகமானோர் அக்காலத்தில் ஒரு முறையாவது கதிர்காம யாத்திரை செல்வார்கள். கதிர்காம யாத்திரை போவதாயிருந்தால் ஒருவருக்கும் சொல்ல மாட்டார்கள். எல்லாம்ஆயத்தமான பொழுது கேட்டாலும் போவதற்கு உத்தேசமிருக்கின்றது என்றே கூறுவர். நானும் குடும்பத்தோரும் பல முறை போயிருக்கிறோம். திருவிழாக் காலமும் சென்றோம். திருவிழா இல்லாத காலத்திலும் சென்றோம். அவ்விடத்து பூசாரிமாரை (கப்புறாலைமாரை) பல முறை சந்தித்து உரையாடினோம். கதிர்காம இரகசியத்தின் சில அம்சங்களை இவர்களிடமிருந்து அறியக்கூடியதாயிருந்தது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் பால்குடி பாவா என்ற காசிப் பிராமணன் தெய்வானை அம்மன் கோயில் அர்ச்சகராக இருந்தார். இவர் ஒருசிறந்தபக்தன். திருவிழா பதினைந்து நாளும் கதிர்காமத்திலிருக்கும் பிள்ளையாருக்கும், தெய்வானை அம்மனுக்கும், மலை உச்சியிலிருக்கும் கோவிலிலும்' செல்லக் கதிர்காம கோயிலிலும் பூஜை செய்வாரீ அதாவது பன்னிரண்டு மைல் ஒவ்வொரு நாளும் நடந்தார். இதில் சில மைல் தூரம் செங்குத்தானது. அனேகமாக இவர்பால் அருந்துவதால் பால்குடி பாவா என்று அழைத்தார்கள். இவர் வணங்கிய ஏதோ சின்னத்தையும் ஆனைமேல் கொண்டு செல்வார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

## பூசை முறை

முதன் முதலாக ஒரு இந்து கதிர்காமத்திற்கு போனதும் இரண்டு விடயங்களைக் கவனிக்கிறான்; முதலாவது ஆதி மூலத்தில் என்ன இருக்கிறதென்று தெரியாததும் இரண்டாவது பூசாரி வாயை துணியால் மூடி ஒன்றும் கூறாமல் கற்பூரதீபம் காட்டுவதும் ஆதி மூலத்தைப்பற்றி எழுத இயலாது. ஏனென்றால் இது ஒரு இரகசியம்- ஒவ்வொருவரும் தானாக அறிய வேண்டும். சொல்வதற்கில்லை. பூசாரி விடமமாக ஒரு கதை கேள்விப் பட்டேன் போர்த்துக்கேய ஒல்லாந்தர் காலத்தில் அரசியல் தொல்லைகளால் பூசை செய்த பிராமணர்கள் ஓடிவிட்டார்களாம். பிறகு பிரிட்டிஸ் வந்ததும் பூசை செய்ய வேண்டுமென வற்புறுத்த அருகே இருக்கும் கிராமமான திசமகாரமையிலிருந்து சிலவிவசயிகள் முன் வந்து வாயைத் துணியால் மறைத்து பூசை செய்யத் தொடங்கினார்களாம். இன்றும் கதிர்காம பூசாரிகள் திசமகாரமையில் தங்கள் இனத்தவர் வீடுகளுக்குப்போவதை நான் கவனித்திருக்கிறேன்.

பூசாரிமாரை முதல் முதல் பார்க்கும்பொழுது எங்கள் பிராமணகுருக்கள் மாதிரி குளித்து துப்புரவாக இல்லாமல் இருப்பதைக் கவனிப்போம். நான் இவர்களுடன் பல முறை அன்யோன்யமாக உரையாடியிருக்கின்றேன். அவர்கள் எப்படித்தோற்றம் கொடுத்தாலும் முருகன் என்றால் பயமும் பக்தியும் உள்ளவர்கள். இல்லாவிட்டால் கோயிலுக்குக்கிட்ட அணுக முடியாது இவர்களுள் ஆனைமேல் பேளையில் வரும் தெய்வீகப் பொருட்கள் எடுத்துக் கொண்டுபோகும் பூசாரி ஒருவர் இருவரே இருப்பர். எல்லா பூசாரிகளாலும் பேளையை கொண்டுபோக முடியாது. ஒரு முறை நான் கதிர்காம திருவிழா காலத்தில் தங்கியிருந்த பொழுது பூசாரிமார் அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள். ஏனென்று வினவியதும் ஆனைமேல் செல்லும் பூசாரிக்குச் சுகமில்லை. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றனர். ஏன் உங்களில் இன்னுமொருவர் சென்றால் என்ன என்று கேட்டேன் அதற்கு எங்களில் வேறொருவருக்கும் இந்தச் சின்னங்களை அணுகபோதிய தெய்வ நம்பிக்கை இல்லையென்றார்கள். வேறொரு பூசாரியாலும் செய்ய முடியாததால் கடைசியில் சுகயீனமான பூசாரி மிகவும் கஷ்டப்பட்டு காரியத்தை செய்து முடித்தார்.

## அரசாங்க அதிபர் குறிப்புகள்

ஊவா மாகாணத்து அரசாங்க அதிபர்கள் கதிர்காமத் திருவிழாக்களைப் பற்றி எழுதிய சில குறிப்புக்களை வதுளைக் கச்சேரியில் வாசித்திருக்கிறேன். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆகக் கூடிய மக்கட்தொகை திருவிழாக்காலங்களில் ஐயாயிரம் என்று ஒரு அதிபர் கூறியிருக்கிறார். அனேகமான யாத்திரிகர்கள் திசைமகாராமைவழியாகசென்றார்கள். மட்டக்களப்பு மக்களும் ஊவாமக்களும் புத்தளையிலிருந்து (Butala) இருபத்தாறு மைல் காட்டு ஒற்றையடிப் பாதையால்சென்றார்கள். புத்தளையிலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் கோங்கட்டிஎன்ற இடத்தில் ஒருமடம் இருந்தது. இதற்குப்பின் பத்தொன்பது மைல் கதிர்காமம் செல்லும் வரையும் ஒரே காடு. இந்தப் பாதையால் சென்ற ஒரு கண்டி சிங்கள பெரியார் ஒரு சம்பவத்தை கூறினார். தீர்த்தத்துக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அதிகம் யாத்திரிகள் இவ்வழியில் செல்வார்கள். மற்றும் வேளைகளில் புத்தளையில் ஆட்கள் சேரும்வரை காத்திருந்து போவார்கள். இந்தப் பெரியாருக்கு இவ்விடயங்கள் தெரியாது ஒரு பின்னேரம் தானும் மனைவியும் சிறுபிள்ளைகளுடனும் கொடியேற்றத்திற்கு இரண்டு மூன்று நாட்களின்பின் புத்தளையில் இருந்து புறப்பட்டார். அடர்ந்த காட்டில் கெதியில் இருண்டுவிட்டது. இரண்டு மூன்று மைல்நடந்தும் ஒரு ஆளையும் வழியில் சந்திக்கவில்லை. அப்பொழுது இப்பெரியாரின் மனைவியார் என்னப்பா முன்பின்தெரியாமல் இந்தக்கடும் காட்டுக்குள் என்னையும் பிள்ளைகளையும் பயப்படவைக்கிறீர்களே நாங்கள் திரும்பிபுத்தளை போவோமென்றாள். பெரியார் உடனே கதிர்காம முருகனை தியானித்தார். உடனே அரோகரா வென்றசத்தம் முன்னுக்கு கேட்டது. இவர்கள் வேறும் யாத்திரிகர்கள்முன்னுக்கு செல்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் ஒன்பதுமைலும் நடந்து கோங்கட்டிக்கு வந்து சேந்தார்கள். மடத்தில் மேற்பார்வையாளர் ஒருவர் தனியேயிருந்தார். அவரிடம் எங்களுக்குமுந்தி வந்தவர்கள் இவ்விடம் தங்காமல் கதிர்காமம் பேய்விட்டார்களா எங்கே அவர்கள் என்று கேட்க அம்மனிதன் இன்று முழுநாளும் ஒருவரும் வரவில்லையே முருகன் இதுபோல் எத்தனை விளையாட்டு விடுவார் என்று கூறினன். இதுபோன்ற பல சம்பவங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.

## பெண்கள் ஆலாத்தி


இரவுப் பூசையில் சில பெண்கள் ஆலாத்தியிடுவதை காணலாம். இவர்களை ஆலாத்தியம்மைஎன்று கூறுவார்கள். இவர்களில் சிலருடன் உரையாடியிருக்கிறேன். தாங்கள் வள்ளியின் தோழிகளின் பரம்பரையை சேர்ந்தவர்களென்றும் பரம்பரை பரம்பரையாக முருகன் கோவிலில் ஆலாத்தியிடுவதாயும் கூறினார்கள். ஒரு விதத்தில் வள்ளி தங்களுக்கு இனம் என்றும் கருதுகிறாகள். இது மிகவும் நல்லது ஏனென்றால் யாரும் ஒரு தெய்வம் சொந்தமென்று எண்ணினால் உண்மையாகவே அவர்கள் கடவுளுக்கு சமீபமாகசென்றுவிட்டார்களென்றே புரிந்து கொள்ள வேண்டும்.

ஊவா மாகாணம் பிரிக்கு முன் கதிர்காமம் வதுளை

(12ம் பக்கம் பார்க்க)

பவர்ஸ் உரம்
வெல்ல முடியாதது
ABC
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6
MASTERS ABC 4/82 (D)

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

## தொடர் நவீன சித்திரம்

### முன்னுரை

கடல் அலைகள் ஆர்த்தெழுந்து, இறங்குதுறையின் பக்கங்களில் மோதிச்சிதறின. சூரியன் உச்சியிலிருந்து, சற்று மேற்கே சரியத்தொடங்கியிருந்த வேளை. இறங்குதுறை மண்டபத்திலிருந்தபடி, பார்க்கும்போது தூரத்தில் கடல் நடுவே கம்பீரமாக உயர்ந்து, காற்றுக்கும் மழைக்கும் கடல் அலைக்கும் ஈடுகொடுத்தபடி, சூழலின் இயற்கை நிகழ்வுகளைக் கிஞ்சிற்றும் பரவாய் பண்ணுமல், ஏகாங்கியாகத் தவமியற்றும் தவசியாகக் காட்சிதரும் கடற்கோட்டை தெரிகின்றது.

காரைநகரில் (காரைதீவு) இருந்து ஏறத்தாழ 800 யார் தூரத்திலும் ஊர்காவற்றுறையிலிருந்து ஒரு மையில் தூரத்திலும் அக்கடல் கோட்டை அமைந்திருந்தது.

''அதுதான் கடல்கோட்டையா?'' என்று என்னுடன் வந்திருந்த நண்பர் கேட்டார். இதைத்தான் ஊர் காவற்றுறைக் கோட்டை என்பதா?'' என்று திரும்பவும் அவர் கேட்டார்.

''அப்படியும் சொல்வதுண்டு. இக்கோட்டையின் உண்மையான பெயர் கெமன் ஹீல் என்பதாகும்...''

எங்களைக்கடற்கோட்டைக்கு ஏற்றிச்செல்வதற்கு ஒழுங்கு செய்திருத்த யந்திரவள்ளம், இறங்குதுறையை அணைத்தபடி வந்துநின்றது. நாங்கள் அதில் ஏறிக்கொண்டோம்.

கடல் நீரைக்கிழித்துப் பிளந்தபடி, யந்திரவள்ளம் விரைந்தது. மாலைக்கதிரவன் பின்னணியில் சரிந்து கொண்டிருக்க, அதன் ஒளிப்பகைப் புலத்தில் 'கருகும்' எனக் கோட்டை பிரகாசித்தது சிறிதாகத் தெரிந்தகடற் கோட்டை படிப்படியாகத் தன்னளவில் விசுவரூபம் பெறத்தொடங்கியது.

வாசனைத் திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடிவந்த ஒல்லாந்தரின் கட்டிடக்கலையின் வலிமையையும் நுட்பத்தையும் கெமன் ஹீல் கோட்டை புலப்படுத்துமாப் போல, கடல்நடுவே உயர்ந்து நிற்கிறது.

''இதுகட்டப்பட்டு எத்தனை ஆண்டுகள் இருக்கும்?''

''முந்நூற்று இருபத்தாறு ஆண்டுகள்...... மூன்றேகால் நூற்றுண்டு... நான்குஐந்து தலைமுறைகள்...''

யந்திரவள்ளம், கடற்கோட்டையை அண்மி, கோட்டை நுழைவாயில் துறையை அடுத்துச்சேர்ந்தது; எங்களை இறக்கிவிட்டு, அந்த வள்ளம் திரும்பிச்சென்றது; ஒருமணிநேரம் கழித்து மீண்டும் வந்து எங்களை அழைத்துச் செல்வதாகக்கூறி விட்டே அந்தவள்ளம் திரும்பிச் சென்றது.

நுழைவாயில் துறையில் நாம் நின்றிருந்தோம். எங்களின் பின்புறம் கடல், அலைகளை வீசியபடி பரந்து கிடந்தது. எங்கள் முன்னுல் இருபதுஅடி உயரத்திற்கு கோட்டையின் மதிற் சுவர் உயர்ந்து நின்றது. முருகைக்கற்களும் சுண்ணும்பும் கருமை போர்த்துக் கடந்தன, வெகுஅருகில் நின்று அண்ணுந்து பார்த்த போது அச்சுவரின் உச்சியை இலகுவில் கருவிகளின்றி எவராலும் அடைய முடியாது, என்பது தெரிந்தது.

எண்கோணக் கோட்டை அது; சுவரின் கோண இணைப்பில் பீரங்கிகள் பொருத்துவதற்கான கொத்தளங்கள் தெரிந்தன. உள்ளே நுழைந்தோம். நம்மை எதிர்கொண்ட படிகளில் ஏறி, கோட்டையின் மேடைத் தளத்திற்குச் சென்ருேம்.

எங்கள் முன் அற்புதங்கள் விரிந்தன. மேலே வானில் இக்கடற் கோட்டை ஒரு பாதுகாப்பு அரண்; காவற் கோட்டை. மேளே வான் தங்கத் தாம்பாளம், கடலினுள் தன்னை ஆழப்புதைத்துக்கொண்டது.

என் நண்பர் கலக்கத்துடன் என்னைப் பார்த்தார். எங்களை அழைத்துச் செல்வதற்கான இயந்திர வள்ளம் இன்னமும் வந்து சேரவில்லை.

கடற்கோட்டை மேற்றளத்தில் நாங்கள் இருவருமே நின்றிருந்தோம். கீழை வானில் தங்தத் தாம்பாளமாகக் கதிரவன் சரிந்து கொண்டிருந்தான். தூரத்தில் எழுவை தீவின் கரை தெரிந்தது. கிழக்கே பார்த்தோம்- காரைநகரின் கரையும் பனை மரங்களின் கூடலும் தெரிந்தன.

இந்த இடத்தில் கோட்டை ஒன்றினைக் கட்டியதற்கான காரணம் தெள்ளெனப் புலனுயிற்று. கோட்டையின் கொத்தளத்தில் இருந்தபடி சூழ்ந்திருந்த கடற் பரப்பு முழுவதையும் கண்காணிக்க முடிந்தது.

நிலவு மெதுவாக ஒளிர்ந்தது. கடற்காற்று வீறுகொண்டு, இரைச்சலுடன் வீசியது. பயத்தைத் தோற்றுவிக்கும் இரைச்சல்கள் வேறு.


''எனக்குப் பயமாக இருக்கிறது...'' என்ருர் நண்பர்.

''இப்படித்தான் அன்று இக் கோட்டையின் காவலன் லெயிரோ நிமோடி பயிவ்வும் பயந்தான்...''

''எப்போது அது...?',

''1658 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி, காலை 8மணி.''

(தொடரும்)




கதை நிகழும் காலக் கோட்டைகளும் சுங்கத் துறைகளும்

# சுவிஸ் அதிகாரி ராஜினுமா!


## அகதிகளை விரட்டியதன்

## எதிரொலி!

சுவிட்சர்லாந்திற்கு அரசியல் அபயம் தேடிவந்த இலங்கைத் தமிழ் இளைஞர்களை, சுவிஸ் அரசு நாடுகடத்தியதை ஆட்சேபித்து, அந்நாட்டு அரசாங்கத்தின் அகதிகள் திணைக்களத்தின் தலைவர் திரு கிறிஸ்டோபர்பிஸ்ச் தனது பதவியைத் தூக்கி எறிந்து விட்டு வெளியேறி உள்ளார்.

அவரது இராஜிஞமா சுவிஸ்அரச வட்டாரங்களில் பெரிய புகைச்சலை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், தனது விருப்பத்திற்கு எதிராகவே இந்த இளைஞர்களை அரசு திருப்பி அனுப்பியதென்றும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய எந்த வித ஆபத்திற்கும் தான் எதுவிதத்திலும் பொறுப்பாளி அல்ல என்பதை தெளிவுபடுத்தவே தான் ராஜிஞமா செய்ததாகவும் விளக்கியுள்ளார்.




### ஆழிக்குமரனின்

### ஆங்கிலக்கால்வாய்

### முயற்சி ஆகஸ்டில்!

ஆங்கிலக் கால்வாயை நான்கு தடவைகள் நீந்திக் கடந்து ''கின்னஸ்'' புத்தகத்தில் மற்றுமொரு உலகசாதனையை நிலைநாட்ட 6000, பவுண்ட்ஸ்டேர்லிங் (இலங்கை ரூபா 2, 16, 000) நிதியுதவி கோரி, கடந்த டிசம்பரில், லண்டனில் ஆழிக்குமரன் ஆனந்தன் சார்பில் விடுவிக்கப்பட்ட அறைகூவலின் விளைவாக இதுவரை 245 பவுண்ட்ஸ்டேலிங் மட்டுமே சேகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நீச்சல் முயற்சிக்குரிய நிதியை எப்படியாவது திரட்டி, எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் ஆங்கிலக்கால்வாயை வெற்றிகொள்ளுவேன் என்று ஆனந்தன் அறிவித்துள்ளார். பிரிட்டிஷ் உள்நாட்டுத் துறை அமைச்சு இதற்காக ஆனந்தனின் விஸாவை எதிர் வரும் டிசம்பர் மாதம்வரை நீடித்ததோடு மட்டுமல்லாமல், அவர் முயற்சி வெற்றி பெற வாழ்த்தும் தெரிவித்துள்ளது.

ஆனந்தனின் விஸா நீடிப்பதற்கு சிபாரிசு செய்து, அவர்சார்பில் பொறுப்புரிமை எடுத்துக் கொண்டது ''தமிழ் டைம்ஸ்'' பத்திரிகைஎன்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தமாதம்லண்டன்தமிழ் மக்களுக்கு ஆழிக்குமரன் அனுப்பியுள்ள ஒரு பகிரங்க மடலில், தனதுஏழு கின்னஸ் சாதனைகளின் ஐந்து கொழும்பில் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்தசாதனை முயற்சிகளின் போது பிரசன்னமாயிருந்த சிங்களமக்களில் பெரும்பாலானோர் தன்னை ஒரு எதிரியாகவே கணித்து, இனக்குரோதரீதியில் நையாண்டி செய்து இழிவுபடுத்தியதாகவும் மனமுடைந்து எழுதியுள்ளார்.

மேலும் தனதுமுயற்சிகளுக்கு உறுதுணையாக நின்றநல்ல சிங்களநண்பர்களுக்கும் இத்தகைய அவமானம் ஏற்பட்டதாக ஆனந்தன் கூறுகிருர்.

தனது சகல உலக சாதனை முயற்சிகளுக்கும் தனது பணத்தையே இதுவரை செலவு செய்ததாக விளக்கும் ஆனந்தன், கடந்த ஜூலையில் நடைபெற்ற இனக் கலவரங்கள் தன்னை பொருளாதார ரீதியில் சரித்துவிட்டதாலேயே, ஆங்கிலக் கால்வாய் முயற்சிக்கு பொது மக்களிடம் நிதியுதவி கோருவதாகக் கூறுகிருர்.

விபத்தில் தெய்வாதீனமாக உயிர் பிழைத்ததாகவும்" ஒரு வருடகாலம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதாயும், தனது வலது காலை இடுப்புடன் இன்றுகூட உருக்குத்தகடும் ஆணிகளுமே இணைத்து நிற்கின்றன என்றும் ஆனந்தன் மேலும் கூறியுள்ளார்.

இந்த முயற்சியை தான் மேற்கொள்வது ஒரு தமிழன் என்ற ரீதியில், தமிழனது துணிச்சலை நிலைநாட்டுவதற்கே என்று மீண்டும் வலியுறுத்தியுள்ள ஆனந்தன், தனக்கு உறு துணையாக இருந்து நிதியுதவி செய்யும்படி லண்டன் வாழ் தமிழ் மக்களை வேண்டியுள்ளார். ஜூன் மாதத்திற்குள் போதிய அளவு நிதி சேராவிட்டால், லண்டனில் டிஸ்கோ நடன நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்து அதன் மூலம் நிதி திரட்ட யோசிப்பதாகவும் அறிவித்துள்ளார்.

---

●

ஆசிரியர்- தெருவில் போகும் நாயைக் கல்லால் ஒருவர் அடிக்கிருர். அதை நான் தடுக்கிறேன் இது எதனைக் குறிக்கிறது.

டினேஸ்- சகோதரபாசத்தை

●

ஆசிரியர்- நாட்டை ஆண்ட மூன்று ராஜாக்களின் பெயரை சொல்லு

நந்தகுமார்- தனிக்காட்டு ராஜா, குப்பத்துராஜா, போக்கிரி ராஜா.

●

காதலி- சேகர் நீங்கள் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டீர்கள்.

காதலன்- ஆ. என்ன?

காதலி- 1984ம் ஆண்டு கலண்டருக்கு பதிலாக 1983ம் ஆண்டு கலண்டரை கொடுத்திருக்கிறீர்கள்.

வாகரைவாணனின்

# வயலும் வாழ்வும்



[2]

வரு விருந்தோம்பும்
வாழ்வரசி வீட்டில்
திரு வற்ற போதும்
தேடி வருவோர்க்கு
ஒரு கவளமேனும்
உவந்தளித்து மகிழ்வாள்
இருமையிலும் போற்றும்
இது நல்ல அறமே!

செல் விருந்தனுப்பி
செய்ய முகம் காட்டி
நல் விருந்தேற்கும்
நங்கையவள் செய்யும்
இல் விருந்தெல்லாம்
இரப்போர்க்கே யிதற்கு
பல் விருந்துண்டோர்
பகருவரே சான்று!

மாதரசி இவளும்
மணந்த நற் கணவன்
ஆதரவு காட்டி
அக மொத்து வாழ்வாள்
காதல் அவர் வாழ்வில்
கரை புரண்டோடும்
ஏதம் எது வரினும்
இருவருமே ஏற்பார்!

மனமொத்த இவர்கள்
மணம் வீசும் வாழ்வில்
தன மொத்த குழந்தை
தளர் நடை பழகும்
இன மொத்த கிளிகள்
எழில் கொஞ்சும் புறுக்கள்
குண மொத்து அங்கே
கூடி விளையாடும்!

பொன்னனவன் வாழ்வில்
பொருளிதனைத் தவிர
வண்டில், இரு எருது
வளர்க்கும் சில பசுக்கள்
கொண்ட சிறு காணி
கொஞ்சும் பொன் நகைகள்
உண்டு வேறில்லை
ஊரெல்லாம் அறியும்!

கிழக்கில் எழும் ஒளியின்
கீற்றுப் படு முன்னே
விளக்கவளே ஒளிர்வாள்
வெளிச்சம் வேறெதற்கு?
வழக்கப்படி அவனும்
வயல் வெளிக்கேக,
பழக்கமுள இனிய
பழைய சோறுண்டு.

தோள் தலையில் ஏரை
தூக்கியவன் வைத்து
வாழ்வுக்குத் துணையாம்
வல்லெருதை ஓட்டி
ஆளரவம் கேட்கா
அப் போதில் நடப்பான்
சூழ் ஒளியின் கதிர்கள்
சுடர் முகம் காட்டும்.

வயல் வெளியைப் பொன்னன்
வந்தடைந்த கணமே
புயல் போல ஆவான்
பூமியது உழுது
இயல் பாகச் செய்வான்
எழும் வேர்வைக் கடலை
முயலல் எனும் சொல்லின்
முழுப் பொருளும் அவனே.

நெல் அள்ளி விதைக்கும்
நிலமதிலே சிறிய
புல் தானும் வையான்
புதிய தொரு வைரக்
கல் போல ஒளிரும்
கழனியது! களிப்பான்
இல்லையவன் போல
இன்னுமோர் உழவன்.

உச்சிப் பொழுதாகும்
உஷ்ணமெலாம் வாரி
மிச்சமின்றிக் கதிரோன்
மேதினியில் பெய்வான்
அச் சமயம் உடம்பு
ஆறவென சிறிதே
பச்சை மர நிழலில்
பையப் போய் இருப்பான்.

நிழல் மரத்தின் கீழே
நின்றாறும் போது
குழலழகி கோதை
குளிர் நிலா முகத்தாள்
அழல் போல எரியும்
அவ் வெயிலில் நடந்து
கழல் ஒலிக்க வருவாள்
கலச மது ஏந்தி

வரம்பிலவள் ஏறி
வரும் ஒயிலைப் பார்த்து
நிரம்புமிவன் உள்ளம்
நின்றெறிக்கும் வெயிலும்
விரும்பும் நிழலாகும்
விழி மலராள் வந்து
கரும்பு என இனிக்கும்
கஞ்சியது படைப்பாள்.

உணவமுதம் உண்டு
உற்ற பசி தீரும்
கணவன் முகம் பார்த்து
காதல் மிகு தாயாய்
மனைவியவள் ஆவாள்
மரத்தடியின் காற்றாய்
இனியள் இவள் சொல்லும்
இவன் மனத்தை வருடும்.

களையாறி எழுவான்
காராளன், கையில்
வளையாடும் மங்கை
வரம்பேறி வீடு
இழையாடச் செல்வாள்
இவன் உள்ளம் அதிலே
விளையாடும்; கால்கள்
விளை நிலத்திலாடும்.

தொடர்ந்தவன் உழைப்பான்
தொழில் செய்யுமிந்த
இடந்தன்னைக் கோயில்
என்று நான் சொல்வேன்
கடந்திடும் போது
கண் முன்னம் ஒசிய
நடந்து பொன் மாலை
நங்கையவள் வருவாள்.

மாலையவள் வனப்பில்
மண்ணெல்லாம் மயங்கும்
வாலை அவள் வானில்
வரைகின்ற கோலம்
போல யார் செய்வார்
பொறுமையெனும் இரவு
காலமிவள் விழுங்க
காத்திருக்கு மம்மா!

அந்தி மகள் செய்யும்
அலங்கார மெல்லாம்
வந்த விதம் என்னே
வரலாறும் உண்டோ?
முந்திப் பல் புலவர்
முயன்றதெலாம் வீணே
சுந்தரியாள் கோலம்
சொல்லில் வருமாமோ?

நாளும் மிக உழைத்தே
நம் மேழைப் பொன்னன்
சூழும் இவள் அழகில்
சொக்கி மனை நடப்பான்
வீழும் அவள் மீது
வெறியன் அவன் இருளன்
பாழும் நிலம் போல
பாருலகம் ஆகும்.

(தொடரும்)

## சோர்வடைதல் கூடாது

புல்லும் பூடும் நிறைந்த மண்ணில்
நெல்லு விளையக் காணன் மழையை
வெயிலில் காய்ந்து வியர்த்த மனிதன்
செயலில் துணிந்து திருத்தி அமைத்தான்
நாற்று விளைய நாளும் முயன்றான்
பற்றா நீரை நிவர்த்தி செய்ய
கிணற்றை அகழ்ந்து நீரை இறைத்தான்
பணத்தை அழித்து வயலைக் காத்தான்
பயிர் வளர்ந்து கதிர் முற்றியதும்
செய்த மனிதன் கிளுகிளுப்படைந்தான்
பின்னர் .... நீர் வற்றியதும் ....
ஈண்டு முதலில் இருந்து முன்னேற
தளர்ச்சியின்றித்தான் முயன்றனனே.

ச நவமாரதி
வகுப்பு, 8 C
யா/இந்துக் கல்லூரி.

சீனத்துக்கதை

## தனக்குத் தகாத வேலை

● ராணி சின்னத்தம்பி

முன்னொரு காலத்தில் ஒரு மட்பானையும், ஒரு களிமண் உருண்டையும், ஒரு முள்ளங்கியும், ஒரு ஈயும், ஒரு கோதுமைக் கதிரும், ஒரு ஊசியும் சிநேகிதமாயிருந்தன. அவை ஒரு சின்ன வீட்டில் ஒன்றாய் வசித்து வந்தன. அவை ஒருநாள் ஒன்றுகூடி வீட்டு வேலைகளைத் தங்களுக்குட் பகிர்ந்து கொண்டன. தண்ணீர் அள்ளும் வேலை களிமண் உருண்டைக்குக் கிடைத்தது. முள்ளங்கிக்கு மாடு மேய்க்கும் வேலை. ஈக்கு எருதைப் பராமரிக்கும் பொறுப்பு. கோதுமைக் கதிருக்குத் தானியந்தூற்றும் கடமை. ஊசிக்கு வீடுகட்டும் வேலை. மட்பானைக்கோ வீட்டிலிருந்து வீட்டுக் காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பு. இப்படியாக வேலை பிரிக்கப்பட்டதும் வீட்டுத் தலைவன் என்ற முறையில் மட்பானை பரணில் ஏறிக் கொண்டது. அங்கிருந்தபடியே எந்தெந்த வேலையை எப்படி எப்படிக் கவனிப்பதென்று யோசிக்கத் தொடங்கியது.

மற்றெல்லாம் மட்பானையின் உத்தரவுப்படி தன்தன் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டன. மண் உருண்டை நீரெடுக்கப்போனபோது நீரில் நனைந்து கரைந்துபோய்விட்டது. நீர் வீட்டுக்குப் போகவில்லை.

முள்ளங்கியும் ஈயும் ஒன்றாக பசுவையும் எருதையும் ஓட்டிக்கொண்டு போயின. அரை வழிபோனதும் பசுவுக்குப் பசி எடுத்தது. நாக்கை ஒரு சுழற்றுச் சுழற்றி முள்ளங்கியை வயிற்றுக்குட் திணித்துக் கொண்டது. எருதுக்குப் பின்னால் அதை விரட்டிச் சென்ற ஈ எருதின் சாணத்தில் அமுங்கிப்போனது. ஆகவே பசுவும் எருதும் வீடு திரும்பிச் செல்லவில்லை.

தானியம் தூற்றக் காற்று இருக்கிறதா என்று பார்க்கக் கோதுமைக் கதிர் வீட்டுக் கூரையில் ஏறியது. அது ஏறவும் அப்பொழுது சுழன்றடித்த காற்று அதை அப்படியே தூக்கிச் செல்லவும் சரியாய் இருந்தது. எனவே அதுவும் வீடு செல்லவில்லை.




ஊசி வீட்டைச் சுத்தம் செய்ய விளக்குமாற்றைத் தேடியபோது நிலத்திலிருந்த பெரிய வெடிப்பொன்றுக்குள் விழுந்து காணாமற் போய் விட்டது.

பரணிலிருந்த பானை வேலைக்குப் போனவர்கள் வரட்டும் என்று காத்திருந்தது. நெடுநேரமாகியும் அவர்கள் திரும்பிவரவில்லை, ''இவர்களெல்லாம் ஒன்றுக்குமுதவாதவர்கள். நானாவது போய் அலுவல்களைக் கவனிப்போம்'' என்று நினைத்தது. உடனே தான் ஒரு மட்பாண்டம் என்பதையும் மறந்துபரணிலிருந்து ஒரே குதியாய்க் குதித்தது. அடுத்த கணம் அது நிலத்திற் சிதறிப்போய்க் கிடந்தது.

## விசித்திரமான விலங்கினங்கள்

### ஸ்கங்க்

பூனையின் அளவே உள்ளது ''ஸ்கங்க்'' என்னும் பிராணி. இந்தப்பிராணி மற்ற எந்தக்காட்டு விலங்குகளுக்கும் தொந்தரவு செய்வது இல்லை. இதற்கு நகமோ, கொம்போ இல்லை இருந்தாலும் இவைசிறிதும் பயம் எதுவுமின்றி வெகு சுதந்திரமாக உலாத்தித்திரியும். சிறிய பிராணியான ''ஸ்கங்க்''வை பெரிய பிராணிகள் கண்டால் பயப்படுகின்றன. இதற்குகாரணம் என்னதெரியுமா? இதற்குக் கோபம்வந்தால் எதிரிகளின் கண்ணைக் குறிவைத்து வால்பக்கத்திலிருந்து மஞ்சல் நிற எண்ணெய் போன்ற ஒரு வகை நீரைப் பீச்சியடித்து விடுவதே இதற்கு காரணம். அந்தநீர் கண்களில் பட்டால் பொறுக்கமுடியாத வலியும் எரிச்சலும் உண்டாகும். கண்ணீர் வெள்ளமாக ஓடஆரம்பிக்கும். மனிதர்கள் கூட இதன் அருகேபோகத் துணிவதே இல்லை இவை இரை தேடிவிட்டுத் திரும்பித் தமது இருப்பிடத்திற்கு வந்துதங்கு

(12ம் பக்கம் பார்க்க)

வி. என். எஸ். உதயசந்திரன்

# சின்னத்தம்பிப் புலவர்

# வாழ்வும் இலக்கியமும்

எவ். எக்ஸ். ஸி. நடராசா

சின்னத்தம்பிப் புலவர் நல்லூர் வில்லவராயரின் புதல்வர். வில்வராயர் ஒல்லாந்தர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் நிலவிய காலத்தில் வாழ்ந்து அரசசேவையில் முதலியாரா இருந்துகடமை புரிந்தவர்: தொன்பிலிப்பு வில்லவராயமுதலியார் என்றும் அழைக்கப்பட்டனர். 1696ல் இவருடன் தொன்அந்தோனி நாராயணர், தொன்லூயிஸ் பூதர்" தொன்தெனிஸ் நிற்சிங்கரகராயர் என்பவர்களும் முதலிமாராக இருந்தனர். பின்கூறிய இருவரும் நீதிமன்றக் குழுவினர் சபையில்அங்கத்துவம் வகித்திருந்தனர்.

ஒல்லாந்தர் காலத்தில் "தேசவளமை" என்றவளமைச் சட்டநூல் தொகுக்கப்பட்டு 1707ல் நிறைவேற்றப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இச்சட்டத் தொகுப்புச் சபைக்கு வில்லவராயமுதலியார் தலைவராக இருந்தாரென்று பொதுவாகப் பின்வந்தநூல்களிற் குறிக்கப்பெற்றிருப்பினும் இக்கூற்றிகுரிய சான்றுசள் புலப்படுமாறில்லை. எனினும் வில்லவராயமுதலியார் என்பார் ஒருவர் 1696ல் ஒல்லாந்தர் ஆட்சியில் முதலியார் என்ற உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார் என்பதற்குச் சான்றுண்டு. ஆகவே, வில்வராயமுதலியார் முதிர்ந்த வயதினராய் பதினேழாம் நூற்றுண்டின் கடைப்பகுதியில் வாழ்ந்தார் என்பது உண்மையாகின்றது.

## இவர்காலப் புலவர்

சின்னத்தம்பிப் புலவரின் வரலாறு எழுதிய எல்லோரும் அவர்காலத்தில் கூழங்கைத் தம்பிரான், வைத்திலிங்கச் செட்டியபர், வரதபண்டிதர், மயில்வாகனப்புலவர், கொச்சிக் கணேசையர் போன்ற சான்றோர் வாழ்ந்திருந்தனர் என்று எழுதியுள்ளனர்.

கோபாலச்செட்டியாரின் மகன் வைத்திலிங்கச்செட்டியார் கோபலாச்செட்டியார் சோழநாட்டினின்றும் இங்கு வந்தவர்' கொச்சிக்கணேசையரிடம் சிலகாலம் தொழில் புரிந்தவர். பின்னர் ஐயருடன் தகராறு கொண்டு வியாபாரத்தில் இறங்கியவர். முத்துக் குளிப்புக் குத்தகையும் நடாத்தியவர். இவரின் மைந்தன் வைத்திலிங்கச் செட்டியார் அக்காலத்து ஒல்லாந்த கொம்மாந்தோராக இருந்த அந்தோனிமூயாட் (1698-1767) என்பவரின் இல்லத்தே வளர்ந்து பதினெண் பிராயத்தில் முத்துக் குளிப்புக் குத்தகை பெற்றவரென்பர். மூயாட் 1762 தொடக்கம் யாழ்ப்பாணம் கொம்மந்தோராகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்திறந்தவர்.

### வண்ணை

### சிவன்கோவில்

வைத்தியலிங்கச் செட்டியார் முத்துக் குளிப்புக் குத்தகையால் பெற்ற ஊதியங் கொண்டு வண்ணுர்பண்ணை வைத்தீசுவரன் கோவிலை 1787 தொடங்கி 1791ல்கட்டி முடித்தவர். வைத்திலிங்கச் செட்டியார் 1805ல் மரணசாதனம் முடித்துக் காசிக்குச் சென்று அங்கு சில காலத்தால் மரணம் அடைந்தார்.

வைத்திலிங்கச் செட்டியார் தமது சகபாடியாகிய மாதகல் மயில்வாகனப்புலவருடன் கூழங்கைத்தம்பிரானிடம் கல்விகற்றவர். வைத்திலிங்கச் செட்டியாருடன் காசிக்குச் சென்று மீண்டவர். 1814ம் ஆண்டுவரையும் வாழ்ந்தவர் 1814ல் மாதகலில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினைப் பற்றிய அம்மானை ஒன்று பாடியதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவர்களிருவருடனும் சேனுதிராய முதலியாரும் உடன் கற்றவரென்பர். சேனுதிராய முதலியார் 1759-1840 என்ற ஆண்டுகளுக்கிடையில் வாழ்ந்தவரென்பர்.

கூழங்கைத்தம்பிரான் என வழங்கப்பெறும் கனகசபாபதி யோகி தஞ்சாவூர் மடத்தில் தம்பிராஞகவிருந்து பின்னர் யாழ்ப்பாணம் வந்துற்ற இவர் வடமொழி தென்மொழி வல்லுநராய்ப் பலருக்கு நல்லாசிரியராகத் திகழ்ந்தார். கோபாலச் செட்டியாருடன் நட்பு ரிமை பூண்டு அவர் மகன் வைத்தியலிங்கச் செட்டியாருக்கு நற்குருவாக அமைந்தவர்' இவர் 1795 வரையும் சீவந்தராக இருந்தனர்.

அதே காலத்தில் கொச்சிக் கணேசையர் என்ற மலையாயாளப் பிராமணர் ஒல்லாந்தரின் சேவையில் அமர்ந்திருந்தார். ஆதிநாராயண கணேசையர் என்பது இவரது முழுப்பெயர். முன்னர் கூறிய தொன் அந்தோனி நாராயணர் இவர் போலும். மூயாட் என்ற கொம்மந்தோரின்கீழ்ச் சேவையாற்றியவர். 'பதினெண் பராயத்தராகவிருந்த வைத்திலிங்கச் செட்டியார் முத்துக் குளிப்புக்' குத்தகை எடுக்க முயன்றபோது அதற்குத் தகுதியுடையவஞகி விட்டாயா எனறு பரிசுசித்தனர். வில்லவராயரும் இவரும் ஒரே வயதினர் போலும். இவரின் இல்லம் புலவர்கள் சேருமிடமாக அமைந்திருந்தது.

இவர்கள் இவ்வாறு பட்டின வாசிகளாக சீவனம் நடத்தி வருகையில் சுன்ஞகத்திற்பிறந்து அச்சுவேலியைப் புகுந்தகமாகக் கொண்ட வரதபண்டிதர் சதுர்வேத ஆயுள்வேதங்களில் அனுபவமுடையவராய் இலக்கிய இலக்கணங்களில் பயிறசி மிக்கவராய்த் திகழ்ந்திருந்தார். சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம் என்னும் புராணங்களையும் அமுதசாகரம் என்னும் விடைவத்திய நூலையும் செய்தவர். இவர் பாடிய சிவபுராணத்துக்கு சின்னத்தம்பிப்புலவரும் மயில்வாகனப்புலவரும் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

சின்னத்தம்பிப்புலவர் தாமியற்றிய கரவை வேலன் கோவை என்னும் நூலிலே கரவெட்டியில் வாழ்ந்த வேளாங்குலச் செம்மலாகவாழ்ந்த வேலாயுதபிள்ளை என்பவரைப் பாட்டுடைத் தலைவஞக்கியுள்ளார்.

"சேது நிலையிட்ட மாப்பாணனீன்றருள் செல்வன்தலை ஓதுவரிசைக் கரவையில் வேலன் உயர்சிலம்பில்' என்று நூலகத்துப் புகழ்ந்துள்ளார். இந்தச்சேது நிலையிட்ட மாப்பாண முதலியார் வேலாயுதர் என்னும் பெயர் 1754ல் ஒல்லாந்தராற் திருத்தப்பட்ட தோம்பிற் காணப்படுகின்றபடியால் வேலாயுதஉடையார் காலம் நிச்சயிக்கப்படுத்தக் கூடியதாகின்றது. ஆகவே,

1. வில்லவராயர் காலம் :1660-1720.
2. கொச்சி ஆதிநாராயண கணேசையர் காலம். 1680-1760.
3. வைத்திலிங்கச் செட்டியார் காலம்: 1740 1795
4. கூழங்கைத் தம்பிரான் காலம்: 1710-1795
5. மயில்வாகனப் புலவர் காலம்: 1740-1815
6. சேனுதிராயமுதலியார் காலம்: 1750- 1840
7. வரதபண்டிதர் காலம்: 1690-1780
8. சின்னத்தம்பிப் புலவர் காலம்: 1700-1780

என்பவர்கள் மேற்காட்டிய காலஎல்லைகளுக்குள் சீவந்தராக இருந்தனர் என்பது ஒருவாறு கொள்ளக்கிடக்கின்றது.

(தொடரும்)

# சோவியத்தின் ஒலிம்பிக் பிரவேசம் - 1908

# 7 பேரே பங்குபற்றினர்

கலைஞர்

கே. எஸ். பாலச்சந்திரன் எழுதும் ஒலிம்பிக் போட்டிகள் — 4

ஐந்தாவது ஒலிம்பிக் போட்டி 1912ம் ஆண்டு சுவீடன் தலைநகரான ஸ்டொக்ஹோமில் நடைபெற்றது. எட்டு நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில் முன்னெருபோதும் இல்லாத அளவு அதிகவீரர்கள் பங்குபற்றினுர்கள்.

27 நாடுகளைச் சேர்ந்த 3282 வீரர்கள் 103 போட்டிகளில் கலந்து கொண்டனர்; உடற்பயிற்சி விளையாட்டுக்களில் பல புதியசாதனைகள் நிறுவப்பட்டன.

இப்போட்டிசளின் போது, ஒரு துக்கமான சம்பவம் நடந்தது; மிகக்கஷ்டமான விளையாட்டுகளாகக் கருதப்படும் டிகாக்லன், பென்ரால்தன் போட்டிகளில் தங்கப்பதக்கங்களைப் பெற்றஜிம் தோப் என்ற அமொக்க சிவப்பிந்திய வீரர் அத்தங்கப்பதக்கங்களை இழக்க நேரிட்டது.

காரணம். பலவருடங்களுக்கு முன்னர் அவர் வறுமையின் நிமித்தம் சம்பளம் வாங்கி பேஸ்போல் விளையாட்டில் கலந்து கொண்டு 'அமெச்சூர்' பணத்துக்காக விளையாடாதவர் என்ற நிலையிலிருந்து தவறிவிட்டார் என்பது தான். போட்டிகளின் முடிவில் சுவீடன் முதலாமிடத்தையும், அமெரிக்கா இரண்டாமிடத்தையும், பிரிட்டன் மூன்ருமிடத்தையும் பெற்றன.

ஐந்தாவது ஒலிம்பிக் போட்டிகளிலேயே சோவியத்அணி அதிகளவு வீரர்களுடன் அதாவது 178 வீரர்களுடன் பங்கு கொண்டது. இதற்குமுன்னர்



4வது ஒலிப்பிக்கில் அது ஏழு வீரர்களுடன்மட்டுமே ஒலிம்பிக்பந்தயத்தில் முதல்தடவையாகப்பங்கு கொண்டதென் பது குறிப்பிடத்தக்கது.

1916ம் ஆண்டில் 6வது ஒலிம்பிக் போட்டிகளை ஜெர்மன் தலைநகரான பெர்ளினில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனல் பெல்ஜியத்தின் மீது ஜெர்மன் படையெடுப்பு திடீரென நிகழ்ந்தது. முதலாவது மகாயுத்தம் ஆரம்பித்தது. அதன் விளைவு...... 6வது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை. ஒலிம்பிக்போட்டிகளுக்காக யுத்தங்களையே நிறுத்திவைக்கும் தூய ஒப்பந்தம் தான் இப்போது மறக்கப்பட்டு விட்டதே!!

### 7வது ஒலிம்பிக்

1920ல் 7வது ஒலிம்பிக் போட்டிகள், நடந்துமுடிந்த யுத்தத்திஞல் மிகவும் பாதிக்கப்பட்ட பெல்ஜியத்தில் அன்ட்வேர்ப் நகரில் நடாத்தப்பட்டது. கஷ்டங்களுக்கிடையிலும் இப்போட்டிகளை சிறப்பாக நடத்திய அந்நாட்டு மக்கள் பாராட்டுக்குரியவர்களே.

போட்டிகள் ஆரம்பிக்க முந்திய ஞாயிற்றுக்கிழமையன்று, நடந்துமுடிந்த யுத்தத்தில் இறந்துபோன விளையாட்டு வீரர்களுக்கான அஞ்சலி அண்டவேர்ப் தேவாலயத்தில் நடைபெற்றபோது எல்லா நாட்டு வீரர்களும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

யுத்தத்தில் மற்றப் பக்கத்தைச் சேர்ந்த ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் இம்முறை போட்டிகளில் பங்குபற்றவில்லை. அமெரிக்க வீரர்களுக்கும் பின்லாந்து வீரர்களுக்கும் உடற்பயிற்சிப் போட்டிகளில் கடும் போட்டி நிகழ்ந்தது. நீண்டதூர ஓட்ட வீரரான பாவோநேர்மி என்ற பின்லாந்து வீரர் இப்போட்டிகளில் 2 தங்கப்பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று உலகப் பெரும் வீரர்கள் வரிசையில்

## விளையாட்டு

அனந்த் - சூரி

12ம் பக்கம் பார்க்க


வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்
* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

# இவ்வாரம் எப்படி?

## திருமலை வே. ரவீந்திரன்

### மேஷம்

இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயபாரம் வேதனைப்படுத்தும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம். மாதரு வழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும் போசகுவரத்து பிரயாணங்களில் அவதானம் வேண்டும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு.

### ரிஷபம்

தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையில் தரமும் உயரும். காதலர் வாழ்வில் கற்கண்டான வாரம். முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். களஸ்திர வழியாலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு. சுமாரான வாரம்.

### மிதுனம்

ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படலாம். அயலவர்களுடன் அன்பாக நடந்துகொள்ளவும் நிதானம் வேண்டும். புதிய துறைகளில் ஈடுபடுவீர்கள். புதிய முதலீடுகளுக்குச் சிறப்பான வாரம். சிலருக்குப் புது மனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம். நல்ல வாரம்.

### கடகம்

அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய் காரியங்களில் தனிப்புகழ் பரவும் முயற்சியால் முன்னேற்றத்திற்கு இடமுண்டு பொருளாதாரத்துறையில் விருத்தி ஏற்படும் பொது மக்கள் ஆதரவு கிடைக்கும். புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும்.

### சிம்மம்

தெளிந்த மனம்' தெய்வ சிந்தை. தேடியதுகிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு. பிள்ளைப் பாசம் உள்ளத்தில் தலை தூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காணமுடியும். குடும்பத்திலும் பிணைப்புக்கள் இறுகும். மகிழ்ச்சிகரமான வாரம்.

### கன்னி

கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் சிலருக்கு அகாலபோசனமும் அந்நியவாசமும் உண்டு. மனதில அமைதி குன்றும். மறைந்த நினைவுகள் மீண்டும் தலை தூக்கும்.

### துலாம்

காதலர்களுக்குக் கன குஷியான தினம்' பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும் இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கரும்பு போல் வாழ்க்கை இனிக்கும். களஸ்திர வழியாலும் சுகத்திற்கிடமுண்டு. வாகனம் வைத்திருப்போர் போக்குவரத்தில் அவதானம் வேண்டும். சுபவாரம்.

### விருச்சிகம்

தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கிடமுண்டு. புதிய முதலீடுகளை இன்று ஒத்திவைக்கவும். நண்பர் ஒருவரின் கடிதம் வேதனையைத் தரலாம். மனத்திடம் வேண்டும். புதிய தலையிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருத்தல் நன்று.

### தனுசு

நீணடநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்புமேலிடும். தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று மும்முரமாய் நிற்பீர்கள். யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

### மகரம்

புதிய தொழில் குறித்துச் சிந்தனை உருவாகும் கூட்டு வியாபாரத்தால் தொழிற்றுறை முன்னேற்றம் காணும். நிம்மதி பிறக்கும். விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள். புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.


### கும்பம்

நீண்டநாள் கொடுத்த கடன் மீண்டும் வந்து சேரலாம். பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படும். புத்திரர்களாலும் புகழ்கிடைக்கும் நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக நிற்பர். தொழிற்றுறையில் நஷ்டம் ஏற்படலாம்

### மீனம்

எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணுக்கும். அற்ப விடயத்திற்குக் கூடப் பொல்லாங்கு கேட்க நேரிடும். தனி வழியில் நாட்டம் செலுத்துவீர்கள். சீறி வரும் கோபத்தை அடக்கவும். நீண்டநாள் நட்பு மீண்டும் இறுக்கமடையும். பொதுப் பணிமூலம் புகழுக்கும் இடமுண்டு. திருப்தியானவாரம்.


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி. ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
- எமது விசேஷமான ஐஸ் கிறீம்வகைகள் :

| | | |
|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்

- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை
(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)
குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-
குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-
பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்
- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22802 Jaffna.
எமது புதிய தொலைபேசி இலக்கம்: 22802
வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை
## ஹாபர் வியூ ஹோட்டல்
THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


## ஒரு சித்திரம்

எல்லையற்று விரிந்து செல்லும் பிரபஞ்சம். அதில் எங்கோ ஒரு நுணுக்குக் கோளத்தில் எண்ணிறந்த கோடி அணு உயிர்த் துகள்கள். கற்ப கோடி ஆண்டுகள் கழிந்தன. அணு உயிர்த்துகள்களிலிருந்து 'அவன்' கர்ப்பமடைந்தானும். அவனுக்குள்ளே மனம் வளர்ந்ததாம். அவன் வளர்ந்ததால் மனம் வளர்ந்ததோ அல்லது மனம் வளர்ந்ததால் 'அவன்' ஆனனே? மனம் கிடைத்ததால் தானே மனிதன்! எண்ணிறந்த கோடி ஜீவராசிகளுக்கிடையே அவனுக்கு மாத்திரம் கிடைத்ததெப்படி? ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திகத்திற்கும் அகப்படாத புதிரல்லவா அது.

தான். காடுடைய சுடலைப் பொடி பூசிய உள்ளங்கவர் கள்வனுனன். நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நாதனுனன். செங்கையில் மான் ஏந்தி, சிறு பறையும் ஏந்தி, அங்கையில் அனலேந்தி, அருளுங்கரமுங் காட்டி' நந்தி மத்தளம் கொட்ட, நாரதர் யாழ் தூக்க 'தோம் தோம்' என்று சுந்தர நடனமும் செய்தான்' மூப்பாலுங் கடந்து அப்பாலே பாழ் வெளியில் ஊழிக்கூத்தும் ஆடினுன்.

காலங் காலமாகக் கண்ட காட்சியின் கருவையெல்லாம் கவிதையாக்கி கல்லிலும் செம்பிலும் வடித்தான் ஒரு கலைஞன்.

பாவலர்கள் பெருகினர்' பக்தகோடிகளும் பெருகினர். ஆலயங்கள் பெருகின. அந்தணர்களும் பெருகினர்.

உருத்திரன் உயிரற்றுப் போனுன்.

பிறகு...

வெள்ளைத்தோல் நாகரிகத்திற்கு விளங்கவைப்பதற்காகக் கலாயோகிகள் வந்தனர்.

## நம்பிக்கை

அவனுக்கு விழிப்புக் கண்டது. தன்னை நோக்கினுன். புறத்தை நோக்கினுன் தனக்குள்ளே துருவி நோக்கினுன். பிரபஞ்சத்தை வியாபித்து விரிந்து நோக்கினுன். ஆதியேது? அந்தமேது? ஆதியோ நினைவிலில்லை. அந்தமோ உருத்து நின்றது- மரணம், அழிவு, வெறுமை. அதற்குப் பின்? ...புநரபி மரணம் புநரபி ஜனனம்...

மரணம் பூதாகரமாக அவன் மனத்தை ஆக்கிரமித்தது. குமுறும் எரிமலையில், எரியும் பெருங்காட்டில், அழிவின் விஸ்வரூபத்தை அவன் தரிசித்தான். அழிவில் பிறந்தவன்- அக்கினியில் பிறந்தவன்- அவன் மனத்தின் அந்தத்தில் பிறந்தவன்- அவனேமயான உருத்திரன்.

'அவன்' வளர்ந்தது போல, அவனும் புறமும் முட்டி மோதி நாகரிகம் வளர்ந்தது போல, உருத்திரனும் வளர்ந்

வெள்ளைத் தோலர்களுக்கே சொல்லப்பட தென்றல் அதில் 'விஷயம்' இருக்கத்தான் வேண்டுமென்று கறுப்புத்தோலர்களுக்கும் பட்டது. என்றுலும் வெள்ளைத்தோல் பாஷையில் படித்தால்தான் சரியாகவிளங்கும் என்பதால் அப்படிப்படித்துப் பலர் குட்டிக் கலாயோகிகளானுர்கள் எப்படியோ... கல்லிலும் செம்பிலும் எப்போதோ கருகிப் போய்விட்ட உருத்திரன், வெள்ளைத்தோல் நாகரிகத்தில் களவாடிக்காட்சி அறையில் வைக்கப்படும் பொருளானுன்.

பிறகு...

தந்தக் கோபுரங்களிலிருந்து கலாநிதிகள் பேராசிரியர்கள்

(12ம் பக்கம் பார்க்க)

பொ. இரகுபதி

# தொடர் நவீனம்

சிற்றம்பலம் மாமா இன்று மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டு இருக்கிறார் அவர் எங்களுடன் ஒருவராய் தன்வீட்டுக் கடமைபோல் எல்லாவற்றையும் கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்.

எங்கள் தந்தை காலமாகு முன் இவரிடம்தான் எங்களை ஒப்புவித்ததாக அம்மா அடிக் அடிசொல்லுவாள்.

எங்கள் தந்தையும் சிற்றம்பல மாமாவும் ஆரம்பகாலத்தில் இணைபிரியாத நண்பர்களாய் வாழ்ந்துகொண்டிருந்தவர்கள். இந்தநட்பின் நெருக்சம் இறுதியில் எங்கள் அம்மாவைக் கல்யாணம் செய்வதில் பிணைந்துவிட்டது.

அம்மாதான் இந்தஇரகசியத்தை எங்களுக்கு ஒருமுறை சொன்னாள்.

இன்றைய நண்பர் உலகம் மிகவும் விசித்திரமானது. கூடாதசேர்க்கை என்றால், ஏதும் செலவுஏற்படுத்தவென்றால் தோளோடு தோள் நிற்பார்கள். ஏதும்உதவி ஒத்தாசைக்கோ அன்றேல் கெட்டு நொந்துபோய் விட்டாலோ எட்டியும் பாரார்கள்...இந்த நிலையில் நையாண்டி செய்யவும் தயங்க மாட்டார்கள்.

நாளை அக்காவைப் பெண் பார்க்க வருகிறார்களாம். காலையில்தான் அம்மா என்னிடம் சொன்னாள்

சிற்றம்பல மாமா இதனை ஒழுங்கு செய்திருந்தார். அவர் ஒழுங்கு செய்திருந்தால் அதில் எந்தப் பிழையும் ஏற்படாதுஎன்பது எங்கள்நம்பிக்கை. எங்கள்வீட்டின் இத்தகைய பெரும்பொறுப்புக்களையெல்லாம் அவர்தலை தான் தீர்மானிக்கும்.

வரப்போகிற மாப்பிள்ளை யாழ்ப்பாணம் கச்சேரியில் கிளாக்ஆக வேலை செய்கிறானும் குடிவெறி, வெற்றிலை பாக்கு கூடாத சேர்க்கைகள் எதுவும் இல்லையாம். குடும்பம் பெரிய குடும்பமாம். இவர் மூன்றாம் பெடியனும். இவருக்குக் கீழ்இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு தம்பிக்காரனும் இருக்கினமாம். தகப்பன் இப்பஇரண்டு வருசத்துக்கு முந்தித்தானும் மோசம்போனவர். இப்பவீட்டை வாறமாப்பிள்ளைப் பெடியனின்ரை உழைப்பிலை தானும் இதுவரையில் குடும்பம் இயங்கிக் கொண்டிருக்காம்......

சீதனம்தான் கொஞ்சம்கடும்பிடியாய்க் கேட்கிறாங்கள். காசாய் ஐம்பது வேணுமாம். இருக்கிற வீடு வளவையும் பெண்ணுக்குத் தேவையான நகைகள் எல்லாவற்றையும் போடட்டுமாம்.

சகுந்தலா அக்காவுக்குஇப்ப என்ன வயது, முப்பத்தி மூன்று முப்பத்திநாலு வயது கடந்திட்டுது. என்ன சின்னப்பிள்ளையோ இன்னும் வைச்சு பார்க்கிறத்துக்கு. ஏதோ இருக்கிறதோட கடன் பட்டெண்டாலும் இந்தக் காரியத்தை முடித்துவிட வேணும் என்றமுடிவால்நான் ஓமெண்டுட்டன்.

இப்பஎன்ன குடிமுழுகவா போகுது முதல்லவந்து பெண்ணைப் பார்க்கட்டும் பெண் பிடிச்சிட்டுதெண்டால் சீதனத்தைக்கொஞ்சம் இறுக்கிப் பேசுவம்.

மாமாவின் முடிவு ஏற்றுக் கொள்ளக்கூடியது தான். ஆனால் இதனால் வரும் சுமையைத் தாங்கிக்கொள்ளப் போகிறவன் நான்தான்.

எதையுமே சிந்திக்கமுடியாத ஒரு மயக்கநிலை எனக்கு.


அம்மாவும் அக்காவும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதான் என்விருப்பம். அவர்கள் கண்கலங்காமல் இருந்தால்தான் எனக்குச்சந்தோஷம்.

என் மனதைத் திடப்படுத்தியவனாக அம்மாவின் அருகே இருக்கிறேன். அவள் என்னைப்பார்த்து மெல்லியதாய்ச் சிரித்தாள்.

அக்கா வீட்டுக்கு வெளியால வரவில்லை. வெட்கம்போலும் நீண்ட நேரமாக உள்ளேயே அமர்ந்துவிட்டாள்.

'அக்கா நல்லாஇருந்தால் தான் உனக்குஉதவி. நீ நல்லாய் இருந்தால்தான் உனக்கு அவள் உதவி. அவளுக்கு இந்தத்திருமணம் கட்டாயம் ஒப்பேறிப்போயிட வேணும். நான் வேண்டாத தெய்வமில்லை. ஆண்டவன் எல்லாவற்றையும் நல்லபடியாய் கவனிப்பான் என்பது என் எண்ணம்.'

அம்மா எவ்வளவு ஆறுதலோடு இதனைக்கதைக்கிறாள். அவளது சொல் ஒவ்வொன்றிலும் அவள் ஆவல்பொங்கிக் கொப்பளிப்பதைக் காணலாம்.




அக்காவுக்குச்சீதனம் என்று கொடுப்பதற்குத் கையிலோ மடியிலோ பணம் எதுவுமின்றி இருந்தமையால் அவளது திருமணப்பேச்சையே இது வரை வீட்டில்எவரும் எழுப்பவில்லை. அக்காவின் வயதொத்த பெண்களுக்கெல்லாம் அடுக்கடுக்காகத் திருமணம் நடப்பதைக்கண்ட பின் தான் அம்மா இதைநினைத்தாள் மாமாவிடம் முறையிட்டாள். அதன் பெறுபேறுதான் இன்றைய ஏற்பாடு......

அம்மாவுக்குத்தனது வீட்டில் ஒருசுபகாரியம் நடக்கப் போகிறதென்றால் எவ்வளவு சந்தோஷப்படுவாள். அதுவும் தன் ஆசைமகள் ஒருத்திக்கென்றால் சொல்லவும் வேண்டுமா?

நாளைக்கு நடக்கப்போகிற நிகழ்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் என்ன என்ன வாங்கவேண்டும் என்பதிலும் அக்காவுக்குப் பணமாகக் கொடுக்கவேண்டிய தொகை தொடர்பாகவுமேஎன் சிந்தனை எல்லாம் சுழன்றுகொண்டு இருந்தது......

அக்காவின் பெயருக்கென்று நாங்கள் தொகையாய் ஏதும் வங்கியிலோ இல்லை. ஊருக்க அடைவு என்றோ, ஈட்டுக்கோ என்று கொடுத்து வைத்திருக்கவில்லை.

என்பெயரில் சிறுதொகை வங்கியில் இருந்தது. அதுவும் கடன்எடுத்து ஒரு வீட்டைச் சின்னனாய்க்கட்டுவம் என்ற நப்பாசையில் தான் கடன் எடுக்கும் நோக்கத்துக்காக அந்தச்சிறு சேமிப்பை ஆரம்பித்தேன்.

என்உழைப்பின் அரைவாசி நேரே வங்கிக்கேசெல்கிறது. மீதியைத்தான் குடும்பம் சுவைக்கிறது.

மிகவும் கட்டுப்பாடான சமையல் நாய்என்றும் கோழி என்றும் கொட்டிச்சிந்தும் அளவுக்குச்சமையல் மிஞ்சாது. இரண்டு கறி என்றாவது ஒரு நாள் அதைமீறிய சுவை உணவு தேடுவோம்.

விருந்தினர்கள் எவரையும் வீடுவரை வரவழைத்து அறுசுவை உணவுபடைத்து உறவுகளை வளர்த்துக்கொள்ளும் நிலையிலும் நாங்களில்லை.

கட்டுப்பாடான குடும்பம், கட்டுப்பாடான வாழ்க்கை நாமுண்டு நாங்களுண்டு என்று இருப்போம்.

இந்தவாழ்க்கை அமைப்பை சமூக உறவுகளினின்றும் எம்மைத் தனிமைப்படுத்துவதாகக் கொள்ளலாம். ஆனால் இன்றைய அவசர உலகில் இதைவிட வேறுவழிகளில் வாழமுடியாது என்பது எனது பிடிவாதமான கொள்கை.

போட்டியும் பொறாமையும் நிறைந்த மனிதர்கள். தான் தன் உழைப்பால் முன்னேற வேண்டுமென்று சிந்திக்கத் தெரியாதவன். அடுத்தவனை மிதித்து வீழ்த்திவிட்டு அவன் மேல் நின்று தன்வெற்றியை நிலைநாட்டத்துடிக்கின்றான்.

தனக்குத்தனக்கென்று பொருள் குவிப்பதில் தனிப் பெருமை காண்கின்றான். அடுத்தவன் எச்சில் இலைக் காய்த்திரிவதைக் கூட அது அவன் திமிர்என்று சொல்வதில் நான் கூச்சப்படாதவன்.

மனிதனை மனிதன் என்று மதியாது அகலக்கால் வைக்கின்ற இந்தஅசட்டுப் பிறவிகளைத்தான் நான்அவசர மனிதர்கள் என்கிறேன். அவர்கள் புத்தி மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் என் எண்ணம்.

இந்த அவல உலகில் அடுத்தவர்களுக்கிடையூறாகவோ அல்லது உதவாமலோ ஒதுங்கி வாழுகின்ற தனிமைப்படுத்தப்பட்ட ஒரு வாழ்வை நான் ஏற்படுத்திக் கொண்டேன்.

இது எனக்கு நல்ல திருப்தியைத் தந்துகொண்டே இருக்கிறது. எனது வருமானத்தில் இத்தகைய ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளத்தான் முடியும்.

வாசகர்களுக்கு

**ஒரு பரிசு**

**இந்நாவலைத் தொடர்ந்து படியுங்கள்! உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது!**

நான் உயர்தரவகுப்புப் படித்துக்கொண்டிருக்கும் போதே பொதுலிகிதர் தரத்துள் புகுந்து புகையிரதத் திணைக்களத்தில் மருதானையில் கடமையாற்றத் தொடங்கி விட்டேன்

அன்று கொம்பியூட்டர் முறையென்ற ஒன்று இருந்தமையால் எனது கபொத சாதாரண தரத்தின் நல்ல பெறுபேறு எவர் கையையோ காலையோ பிடிக்க வைக்காத நிலையில் என்னை ஒரு தொழிலில் சேர்த்து வைத்தது.

என்னைப் பொறுத்த வரையில் இது எனக்கேற்பட்ட விபத்து என்று தான் சொல்லுவேன். ஏனென்றால் இன்றுள்ளமுயற்கொம்பான வேலை வாய்ப்புள் ஒவ்வொருவரும் முண்டியடித்துக்கொண்டு ஏதேதோ வகைகளில் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்வதில் என்னால் அவர்களுடன் போட்டி போட முடியாது.

நான் அந்த வகையில் ஆண்டவனுக்கு நன்றி தெரிவிக்க என்றும் மறப்பதில்லை.

என் வருமானம் நான் மருதானையில் இருக்கக் கட்டுப்படியாகவில்லை. அத்தோடு வீட்டு ஒத்தாசைக்காகவும் யார் யாரையோ எல்லாம் கண்டு என் காரியத்தைச் சாதித்தேன்.

இப்போது யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகிறேன் வீட்டிலிருந்தே வேலைக்குச் செல்லுகின்ற ஒரு வாய்ப்பு. இந்தக் காலத்தில் நான் எனது சேமிப்பை ஆரம்பித்தேன்.

இந்த நாளையில் ஒரு கல்வீடு சின்னனாகக் கட்டினால்த் தான் அதை ஒருபெண்பிள்ளைக்குக் கொடுத்து அதையும் கரைசேர்க்கலாம் என்பது மரபாக மாறி வருகின்றது.

ஒரு வீடு இல்லையென்றால் கல்யாணப்பேச்சை எடுக்காத எத்தனையோ கல்யாணத் தரகர்களின் கரகரப்பான குரலைக் கேட்டிருக்கிறேன்

சேமிப்பைக் காட்டி வீட்டுக் கடனை எடுக்கலாம் என்பதுதான் அடுத்த திட்டம்.

காசு சிறுகச் சிறுக சேமிப்பாகிக்கொண்டே போகின்றது. ஆனால் கடன் எடுக்க முடியாத நிலை ஒரு புறம் வீட்டுக் கட்டை தொடக்க முடியாத நிலை மறுபுறம்.

கொடிவிட்டு ஏறிக்கொண்டிருக்கும் பொருட்களின் விலையின் முன்என்சிறு சேமிப்பு ஈடுகொடுக்காது......வீட்டு வேலையும் தாமதப்பட்டுக் கொண்டே சென்றது. இந்த நிலையில்தான் அக்காவின் கலியாணப் பேச்சும் நெருங்கிக் கொண்டிருந்தது.

என்பெயரில் நாற்பதாயிரம் ரூபாவட்டியும் இருக்கிறது மீதியை மாமாவிடம் கேட்டும்பார்க்கலாம். அல்லது எங்காவது கடனாகஎடுப்பம் என்பது என்திட்டம் பெண்ணுக்குத் தேவையான நகைகள் எல்லாம் போடவேண்டும்......

அக்காவிடம் இப்போது இரண்டுபவுணில் ஒருஒற்றைப் பட்டுச்சங்கிலியும் அரைத்தங்கப்பவுணில் ஒருமோதிரமும் தோடுமூக்குத்தியோடு ஒன்டரைத் தங்கப்பவுனில் ஒரு சோடிகாப்பும் இருக்கிறது... மீதிக்கு அம்மாவிடம் இருக்கிற சங்கிலி காப்பை அழிச்சுச்செய்யலாம்.

அம்மாதான் இந்தமுடிவைச் சொன்னாள்......

இப்போது எனதுமனதுள் இனமறியாத குதூகலம் ஏதோ காரியங்கள் எல்லாம் ஏற்பாடாகி விட்டதென்றதெம்பு,

என்சிந்தனை தடைப்பட்டவன் போல் நிமிர்ந்து பார்த்தேன் மாமா இன்னமும்போகவில்லை அவர் ஏதோயோசனையில் இருப்பவர் போல் அந்தக்கதிரையில் படுத்திருந்தார். அக்கா தேநீர் கொடுக்கும்போது தான் சுயநினைவக்கு மீண்டவராகக் கோப்பியை வாங்கினார்......

அக்காமீண்டும் வீட்டுக்குள் போய்விட்டாள்.

(12ம் பக்கம் பார்க்க)

## காலத்தை மீட்பதற்காய்!

அன்பே
நானுன்னை
பிரிய மனமின்றி
பிரிந்து செல்லுகின்றேன்
பிரிவை நினைக்குகையில்
உனக்குள் மாத்திரமென்ன
எனக்குள்ளும் வேதனைத்தான்
இருந்தும்
பிரிய மனமின்றி
பிரிந்து செல்லுகின்றேன்

ஏனென்றால்
மீண்டும்
உன் மடியில்
கண் புதைத்து கவிநூறு
பாடிவிட வேண்டுமென்ற
பேரெண்ணம்வைராக்கியமாய்
திடமாய் அமைந்ததினால்
விட்டுப் பிரிகின்றேன்
பிரிவதற்கு மனமின்றி

ஆம்
கடந்த நாட்களில்
பண்ணைக் கடற்கரையின்
பரந்த மணல்பரப்பில்
வெள்ளி நிலா பொழிய
விடியும் வரை உன்மடியில்
கண்புதைத்து நானந்த
வானத்தை அண்ணாந்து
பார்த்திட்ட வேளையில்
துள்ளிக் குதித்தோடும்
முகில்கள் கூட்டம் அதை
பற்றிப் பிடித்தென்
கவியில் முடிச்சிட்ட
அந்த நாட்களதை
அடிமனத்துள் மெல்லுகின்றேன்
எங்கே அந் நாட்களென
எண்ணி நான் பார்க்கின்றேன்

ஆம்கயவர் கூட்டத்தால்
களவாடப்பட்ட
துடிப்புமிகு
அந்த நாட்களவை
அடியேனை மீண்டும்
விடியும் வரை உன் மடியில்
கண்புதைத்து கவிநூறு
பாடும்படி அழைப்பு விடும்
காலத்தை மீட்பதற்காய்
நானுன்னை
விட்டுப் பிரிகின்றேன்
பிரிவதற்கு மனமின்றி

வான் கடந்து
கடல் கடந்து
கணக்கற்ற மைல் நடந்து
எங்கோ திக்கில்
இருக்கின்ற அந்த
குபேர மண்ணதினில்
கால் புதைக்க அல்ல
எண்ணுகின்ற உண்மையினை
நீயும் அறிந்திடுவாய்

அன்பே
விரும்பத்தகாதோரும்
வெற்றுடம்பாய் ஆக்கிஉன்
விரும்பத்தகா செயலால்
விரும்பிப் புரிக்கின்ற
தூஷண செயல்களும்
தொடர்கதையாய் அமைந்து நிற்க
கையிரண்டும் விரித்து
கண்ணுக்குள் புதைத்து விடும்
படியாய் இருந்து நான்
பெருமூச்சு விட்டிடவா
நீயே சொல்!
பண்ணைக் கடற்கரையில்

மாத்தளை
ஆ. இராஜலிங்கம்

# சோவியத்தின் ஒலிம்பிக்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பிடித்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த அல்பேர்ட் உறில் என்றவீரர் தனது 36வது வயதில் இப்போட்டிகளில் முதன்முறையாக பங்குபற்றி 800 மீட்டர், 1500 மீட்டர் ஓட்டப் போட்டிகளில தங்கப்பதக்கங்களைத் தட்டிக்கொண்டது குறிப்பிடற்குரியது.

## 8-வது ஒலிம்பிக்

1924ல் 8வது ஒலிம்பிக் போட்டிகள் இரண்டாவது முறையாக பிரான்ஸின் தலைநகரான பாரிசில் நிகழ்ந்தது. ஆனல் 1900ல் இங்கு நடந்த போட்டிகளுக்கும் இதற்கும் தான் எவ்வளவு வித்தியாசம் அமைப்பிலும் தராதரத்திலும்?

1924ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதியன்று கொலம்பஸ் விளையாட்டரங்கில் 60,000 மக்களின் முன்நிலையில் 8வது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாயின ஆகக் கூடுதல் வீரர் குழுவைக் கொண்ட அமெரிக்கா, ஆகக் குறைந்த வீரர் குழுவைக் கொண்ட ஹெறயிட்டி (Haiti) உட்பட 55 நாடுகள் பங்குபற்றின.

இப்போட்டிகளில் அமெரிக்கா அதிகப் பதக்கங்களைப் பெற்று முதலாமிடத்தைப் பெற, பின்லாந்தும், பிரிட்டனும் முறையே இரண்டாம் மூன்ரும் இடங்களைப் பெற்றன.

ஆனல் இந்த ஒலிம்பிக் போட்டிகள் பின்லாந்த வீரர் பாவோ நேர்மியின் தனிப்பட்ட சாதனைக்காக என்றும் நினைவில் நிலைத்திருக்கும். 1500மீட்டரிலுருந்து 10,000 மீட்டர்வரை 4 போட்டிகளின் முதலிடத்தைப் பெற்று, முந்திய ஒலிம்பிக் போட்யில் தான் நிறுவிய சாதனையையும் மிஞ்சினுர் அவர்.

டார்சானுக நடித்து சிறுவர்களின் உள்ளங்களைக் கொண்டவரும், அண்மையில் காலம் சென்றவருமான ஜொனிவெயிஸ் முல்லர் இப்போட்டிகளில் நீச்சல்நிகழ்ச்சிகளில் 3 தங்கப்பதக்கங்களைப் பெற்றுத் தான் முதல் முதலில் பிரபல்யம் அடைந்தார்.

(தொடரும்)

# விசித்திரமான விலங்கினங்கள்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வது கிடையாது. பகல்முழுவதும் தூங்கிவிட்டு இரவில் இரைதேடக் கிளம்பும் ''ஸ்கங்க்'' பொழுது விடியும்போது எங்கே இருக்கிறதோ அங்கே கிடைத்த பொந்தில் படுத்துத் தூங்க ஆரம்பித்து விடும்.

## இராட்சத அணுங்கு

அணுங்கு வகைகளிலே மிகவும் நீளமானது இராட்சத அணுங்கு ஆகும் அதுசுமார் 3அடி உயரம் உடையது அதன் உடல்முழுவதிலும் சிப்பி போன்ற ஒருவகை கவசம் அமைந்துள்ளது. அணுங்கு பிறக்கும் போது மென்மையான உடலுடன்தான் பிறக்கிறது பின்புதான் அதன் உடலில் கனமான கவசம் உருவாகிறது. அமேசன் நதிக்கரையிலே தான்இராட்சத அணுங்குகள் அதிகமாக காணப்படுகின்றது. பகலிலே மணற்பொந்துகளில் படுத்துறங்கும் இராட்சத அணுங்கு இரவில் தான் இரைதேடப் புறப்படும். பூச்சிபுழு, எறும்பு, பாம்பு, கிழங்கு ஆகியவற்றையே அது விரும்பி உண்ணும்.

## ராகூன்

''ராகூன்'' பிராணி பூனை அளவிலானது. இதுகரடி வர்க்கத்தைச்சேர்ந்தது. இதற்கு ஒரு விசித்திரமான பழக்கம் உண்டு. தனது உணவைத் தண்ணீரில் கழுவிவிட்டு உண்ணும். இவற்றின்காலடி சின்னக்குழந்தையின் காலடி போலஇருக்கும் இவைதம்மைப் பின் தொடர்ந்து வரும்எதிரிகளை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவை

(தொடரும்)

# திர்காமத்தில் நிகழ்ந்த சம்பவம்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்டத்திற்கு சேர்ந்தது. இப்பொழுது மொனருகலை மாவட்டத்திற்கு உரியது. அரிச்சந்திரன் விசுவாமித்திரருக்கு தன் இராச்சியத்தை கொடுக்கும் பொழுது விசுவாமித்திரர் கூறுகிருர் இப்பொழுது இந்தஇராச்சியம் என்னுடையது நீ காசிக்குப் போகலாம். அந்தஇடம் சிவனுக்குரியது ஒரு அரசனுக்குப் உரியதல்ல. இப்படிப்பார்க்கப் போனல் கதிர்காமம் வதுளைக்கும் உரியதல்ல மொனருகலைக்கும் உரியதல்ல முருகனுக்கே உரியது.

(முற்றும்)


# நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச்சிட்டுக்களைப் பெறுவதில் உள்ள

★ தாமதம் ★ வீண்செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ்.நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம்; அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச்சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY

To many parts of the world at Unbeatable Rates

த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 23680

TFC


# ஒரு நோக்கு

ராகவன்

# பாஞ்சாலி சபதத்தினூடாக பாரதி

மாயச் சூதாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாண்டவர்களிடமிருந்து செல்வங்களையும், நாட்டையும் சூதாட்டத்தின் மூலம்கவர்ந்து விடுகின்றனர் கௌரவர்கள். சகுனியின் வார்த்தைகளினுல் மதியிழந்து தொடர்ந்து மக்களையும், பின்னர்தங்களையும் வைத்துத்தோற்றனர் பாண்டவர்கள். இறுதியாக பாஞ்சாலியையே [திரௌபதி] வைத்தாடிதோற்றனர். சிறுமதியுடைய துரியோதனன், தம்பி துச்சாதனனை அனுப்புகிருன் பாஞ்சாலியைஇழுத்து வரும்படி. பாஞ்சாலிதேவியை, அவளது கூந்தலினைப்பற்றி இழுத்துவருகின்ருன் துரியோதனன். வீதியில் குழுமிநின்ற மக்கள் 'என்ன கொடுமையிது!' எனகலங்குகின்றனர் ஆத்திரப்படுகின்றனர். கூடிப் பேசிகண்ணீர் விடுகின்றனர். ஆனல் அந்தப் பெண்ணை கொடியவனிடமிருந்து மீட்டிட துணியவில்லை மக்கள் இது 'மகாபாரதந்தில்' ஒரு கட்டம்.

பாரதேசம் அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருக்கிறது. பாரதமக்கள் அடிமைச்சுக போகங்களை நாடியும், அந்நியர்க்கு அஞ்சியும் தமதுபரம்பரைத்தன்மான உணர்வையிழந்து பேடிகளாயிருந்தனர். அவர்களின் ஈனநிலைகண்டு, எத்தனையோ பாடல்களை எழுதி அவர்களை விழித்திட வைக்கமுயன்ருன் பாரதி. இந்நிலையில்தான் அவன், கௌரவர்களை சுரண்டி வாழ்ந்த பிரிட்டிஸ் ஆட்சியாளர்களாகவும், ஹஸ்தினுபுரத்து மக்களை- பாரததேசத்து மக்களாகவும், பாஞ்சாலிதேவியை- பாரதமாதாவாகவும் உருவகப்படுத்து பாஞ்சாலிசபதத்தினை வடித்தான் என்பர். அதில் மேற்குறிப்பிட்ட காட்சியைப்பாடும்போது; தம்சக்தியினைமறந்து அடிமைவாழ்வினை அனுபவிக்கும் மக்களைப் பார்த்து, பொறுமையிழந்து குமுறும் சிலவரிகள் இதோ.

நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி<br>
முன்னிழுத்துச் சென்ருன்.<br>
வழிநெடுக மொய்த்தவராய்,<br>
'என்ன கொடுமையிது'<br>
வென்று பார்த்திருந்தார்,<br>
ஊரவர் தங்கீழ்மை உரைக்குத்தரமாமோ?<br>
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்<br>
தன்னைமிதித்துத் தராலத்திற் போக்கியே,<br>
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்<br>
நெட்டை மரங்களென நின்று புலம்பினுர்.<br>
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

பேடிகளாகிவிட்டிருந்த மக்களின்மேல் கோபங்கொண்டு அவர்களை 'வீரமிலாநாய்கள், என்றே புரட்சிக்கவிஞன் கூறுகிருன்.

# ஞானரசம்

சச்சி

இந்து தெய்வங்கள் மனித வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத உன்னத நிலையில் வைத்து எண்ணப்படுவதில்லை.

தெய்வத்துக்கு இணையாக எதையும் சொல்லக்கூடாது என்று கட்டளை போடுவதில்லை.

இன்று தெய்வம் மனித வடிவில் இயங்கும். மனிதவாழ்க்கையின் பல கூறுகளிலும் தன்னைச் சம்பந்தப்படுத்திக்கொள்ளும்.

அது காதலிக்கும்; பரவசப்படும்; அது போர் புரியும்; யுத்த தர்மத்தைப் போதிக்கும்

அது தூது செல்லும்: அரச தர்மத்தைப் புகட்டும்.

காதலனையும் காதலியையும் சேர்த்து வைக்கின்ற வேலைக்குக்கூட அது துணைபுரியும்.

ஆகவேதான் இந்த இதிகாசங்களோ புராணங்களோ வறட்டுத்தனமாக இல்லை.

## புராணங்கள் வெறும் தத்துவங்களல்ல

நமது இதிகாசங்களில் லௌகீகத்தின் கம்பீரம் இருக்கிறது.

சுகமான காதலின் கனிவு இக்கிறது

அவற்றிலே ஒன்று ராதா கிருஷ்ணபாவம்.

இந்தப் பாவத்தை ஒரு காம நூல் போலவே வடித்தார் ஜயதேவர்.

அது ஞானத்தின் முதிர்ச்சி பெற்ற நிலையாயினும் காமரசமாகவே தோற்றமளிக்கிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னுல் 'அஷ்டபதி கீதகோவிந்தம்' என்ற தலைப்பில் இதனை எழுதினர்.

ஒவ்வொன்றும் எட்டுச் சரணங்கள் கொண்ட இருபத்திநான்கு கீதங்களாக அவர் இதனை வடித்தார்.

இதில் ஒரு வேடிக்கை. இதைப் படிக்க ஒரு வெள்ளைக்கார அதிகாரி 'இது ஒரு ஆபாச நூல்' என்று தடை செய்ய உத்தரவிட்டார் அத்தோடு ஜயதேவரைக் கைது செய்யுமாறும் உத்தரவிட்டார்.

அதன்பிறகுதான் ஜயதேவர் வாழ்ந்தது பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு என்று விளக்கப்பட்டது.

[அர்த்தமுள்ள இந்து மதம் நூலில் கவிஞர் கண்ணதாசன்]

# நம்பிக்கை

(10ம் பக்கத் தொடர்ச்சி)

எனப்படும் அபூர்வப் பிரகிருதிகள் வந்தனர். இவர் 'வடகரைத்' தெய்வம் என்றனர். பிராமணத் தெய்வம் என்றனர். எங்களுடையவன் அல்ல பிறத்தியான் என்றனர். '.ஆரியச்சிலையை உடை'' என்றது ஒரு குரல். ஐயோ.. ஐயோ... இப்படியெல்லாம் அபூர்வ ஆராய்ச்சிசன் செய்தாலும் நாங்களும் 'பொட்டு' வைப்பவர்கள், பழைய பக்த கோடிகளின் பரம்பரை, ஆராய்ச்சிவேறு அபிமானம் வேறு என்றும் சொன்னுர்கள் தந்தக் கோபுரங்களில் நடைபெறும் யாகங்களில் கலந்து கொண்டு அவிர்பாகம் பெறும் தேவர்குழாத்தினர் அற்புதமான ஆராய்ச்சியென்று ஆர்ப்பரித்தனர்.

யாழ்ப்பாணத்தில், ஒரு சிற்றூரில், ஓருசுடுகாடு. பரவைக் கடலின் பின்னணியில் ஒருபுறம் வயல்வெளி, மறுபுறம் பொட்டல்வெளி. ஓவென்று வீசுங்காற்றில் பனையோலைகளின் ஓலம். வெள்ளிக்கிழமை அந்திபட்டு கருக்கல் தொடங்கிவிட்டது. சுடலையில் அப்பொழுதுதான் எரிந்து தனிந்ததொரு சிதை. ஒரு கிழவரும் கிழவியும் வந்தார்கள். நடுச்சுடலைக்கு நடந்து சென்ருர்கள். அருவமும் உருவமும் அற்றுத்தெரியும் சுடலையின் பொட்டல் வெளியில் கிழவி ஒரு எண்ணெய்விளக்கை ஏற்றிவைத்துக் கர்ப்பூரமும் கொளுத்தினுள். கிழவர் தேங்காயை உடைத்தார். இருவம் விழுந்து கும்பிட்டனர்.

''உது என்னசாமி ஆச்சி''

''தம்பி உவர் மயான உருத்திரன் கண்டியோ! எம்பெருமான், அவருக்கு இங்குதான் இருப்பிடம். இங்கு வந்தால் தான் ராசா நாங்கள் அவரைத் தெரிசிக்கலாம்''.

ஒருகணம் மனம்வியப்பால் அதிர்ந்தது. ஆதிமனிதன் கண்ட அந்தக்காட்சியை— இயற்கையின் திகிலிலும், அழிவிலும் வெறுமையிலும் பாழிலும் அவன் பெற்ற அந்த அதியற்புத மனஉணர்வினை— அவர்களும் கண்டார்களோ?.. வெறுங் கிரியைதானே?... நான்தான் கற்பனை செய்து கஷ்டப்படுகிறேனே?......

# தொடர் நவீனம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

''தம்பி இந்திரன்...என்ர கையில இப்பஐயாயிரம் ரூபா இருக்கு தேவைஎண்டு வரேக்கநான் உடனதாறன், பிள்ளை சகுந்தலாவின் பேரிலஇருக்கிற காசையும் சேர்த்து இந்தக் கலியாணத்தை நீ முடிச்சுப் போடவேணும். என்னட்டை வேறகாசு எதுவுமில்லை.

''உனக்கு கந்தோரில தெரிஞ்சவைகனபேர் இருப்பினம் இப்போதைக்குமாறு பிறகு பார்க்கலாம்...'' இப்படிமாமா சொன்னுர். அவருக்குஓரளவுக்குத் தெரியும், என்னிடம் எவ்வளவு இருக்கும்மெண்டு. இருந்தும் அவர்தன்னுலான உதவியைச் செய்யத்துடிக்கிருர்

அம்மாவைக் கூப்பிட்டார். அவளும் அவர் காலடியில் வந்து உட்கார்ந்து கொண்டாள் மாமா சொன்னுர்;

''தங்கச்சி உனக்கு உன்ரை மச்சாளைப்பற்றித் தெரியும் தானே எதுக்கும் நான் ஒருக்காப் போ எண்டு சொல்லுறன். அவள் இந்தக் கருமத்துக்கு நாளைக்கு வந்தால் கண்டுகொள். இல்லையெண்டால் என்னைக் கோபிக்காதை. பிள்ளையள் இரண்டையும் வரேக்கை கூட்டிக் கொண்டு தான் வருவேன்.

''அவள் வருவாள் என்று நான் நினைக்கேல்ல. உன்ர வீட்டில நல்ல ஒரு காரியமெண்டால் அவள் சினந்து கொண்டு தானிருப்பாள்...

''தம்பி இந்திரன் நாளைக்கு வேண்டிய சாமான்களைக் கவனி. அவர்களை இரவு ஆறு மணிக்குப் பிறகுதான் வரச் சொல்லி இருக்கிறன். மெல்லியதாய் இரவுச் காப்பாட்டோடை விசயத்தை முடித்து விடலாம்...

''சாதாரண குடும்பந்தான் அதுகும். ஆடம்பரமாய் எதுவும் செய்யத் தேவையில்லை...

''அப்ப நான் நடக்கப் போறன்...''

மாமா போய்விட்டார்.

வீடு ஊமைத் தூக்கத்தில் மறுநாட் காலை விழித்துக் கொள்கின்றது.

(தொடரும்)

நாச்சிமார்கோவிலடி பரிதாப மரணங்கள்

# இயற்கை சபித்துவிட்ட இவர்களுக்கு இனி யார்கதி?




சாவில் இணைந்த தம்பதியர்

ராஜகோபால்

அந்த அநியாயம் பார்த்தவர்கள், கேட்டவர்கள் நெஞ்சங்களையெல்லாம் உருகவைத்துக் கண்ணீரைப் பெருகவைத்துக்கொண்டேயிருக்கிறது!

விரக்திவிட்டு எண்ணும் விநாடிக்குள்ளேயே அந்த அவலங்கள் நடந்துமுடிந்தது...

நான்கு பிள்ளைகளும் அப்பா, அம்மா இல்லாத அநாதைகளாக்கி...

சகிக்கமுடியாத அக்கொடுமையை நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை!

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில்,

பொழுது புலரும் அதிகாலைப் பொழுதில் தனது கடைக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த அப்பாவியை மினிபஸ் மோதிக் கொன்றுவிட,

'நீயில்லாமல் என்னால் வாழ முடியாது' என்று சொல்லிக்கொண்டே அவரைக் கரம் பிடித்தவளும் 'உடன்கட்டை' ஏறிவிட...

பெற்றோரின் அரவணைப்பிலே, சிரித்துச், சிணுங்கி, மகிழ்ந்து, அழுது, ஆடிப்பாடி, ஓடியாடி, பசித்தநேரம், விளையாடியநேரம் எந்தநேரமாக இருந்தாலும், அம்மாவின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்த அரைகுறையாகக் கொடுக்கும் தெறி உண்டு களித்த நான்கு பிள்ளைகளும்,

இப்போது

யாரை "அம்மா" என்று இனி அழைக்கப் போகிறார்கள்?

அப்பா என்று யாரைச் சொல்லப்போகிறார்கள்?

கனிவோடு கண்ணீர் துடைத்து, ஆதரவுகொடுத்து இதயத்தால் நேசித்த குழந்தைகளுக்கு அப்பாவும் அம்மாவும் இருக்கவேண்டும்!

'தாயோடு அறுசுவை போம் தந்தையோடு கல்விபோம்'

அம்மாவை இழக்கவேண்டிய துர்அதிர்ஷ்டம் ஏற்பட்டாலும், பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கும்வரை,

அம்மா என்ற தெய்வம் வாழவேண்டும்!

அந்த அம்மாவும் போய்விட்டாள்...

## ஈரமுள்ள நெஞ்சங்களே இரங்குங்கள்

பதினைந்து நாட்களாகிவிட்டன.

பதினொராம் திகதி அதிகாலை சேர் பொன். இராமநாதன் வீதியில் வசிக்கும் நாற்பத்தெட்டு வயதான [illegible] எழுந்து லௌனந்தம் தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஆலயத்திற்குச்சென்று வணங்கிவிட்டு, தனது 'ஆம்பாள் கபே'யைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்கத் தயாராகிறார்.

அப்போது நேரம் காலை 5-40 இருக்கலாம்.

தனது நண்பர் சண்முகலிங்கத்துடன் கடைக்கு முன்பாக நின்று கதைத்துக்கொண்டிருக்கிறார்

கணப்பொழுதில் மின்னலென அந்தக்கோரம் நடந்துவிட்டது!

யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த மினிபஸ் வீதியைவிட்டு விலகி, லௌனந்தத்தை மோதிவிட்டு, கடையின் முன்பக்கத்தை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து நின்றது!

கதறுகிறான் கயலா...!

அபிராமான, எடுப்பான, லௌனந்தம் கொண்ட செய்தி கேட்டு விழுந்தடித்த அவர் மனைவி [illegible] கதறிக்கொண்டே அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தார்.

பக்கத்து வீட்டொன்றில் நிறுத்திவைத்திருந்த லௌனந்தம் காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கணவரின் [illegible] கண்ணீர் [illegible] இஷ்டதெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொண்டார்!

லௌனந்தத்தின் மூத்த அக்காவின் [illegible] பின்பு லௌனந்தம் [illegible] சொல்லிக்கொண்டிருந்தார்.

[illegible] இது திடீரென [illegible] இருக்கும்.

(18ம் பக்கம் பார்க்க)

